திராவிடநாடு

17–5–59 | வார வெளியீடு | விலை 16 காசு

அவருமா!

—o—

"தன்னாலான பணியினை மக்களுக்குச் செய்வதைவிட, மகேசன் மீது காட்டும் சிறந்த பக்தி வேறெதுவுமில்லை.

ஒருவன் எப்போது தன் கடமையைச் செய்து முடிக்கிறானோ அதுதான் 'முக்தி' என்று கீதையே சொல்கிறது.

எல்லோருமே மோட்சம்நாடி, முனீஸ்வரர்களாகிவிட முடியாது. தான் எடுத்துக்கொண்ட வாழ்க்கையைத் தூய்மையாக முடிப்பதன் மூலமும் சித்திபெறலாம்; இதுதான் உண்மையான மோட்சப்பாதை.

கடவுள், கோயில்களிலே மட்டும் இல்லை; ஒருவனுடைய இருதயத்துக்குள்ளும் இருக்கிறார். நடமாடும் ஒவ்வொருவரும் ஒரு கோயில்தான்! மாலையும் சூடமும் காட்டுவதாலேயே கடவுளை ஏமாற்றி விட முடியாது. உலகமே அவனுடையது. அவன் கொடுத்ததை ஏன் அவனுக்குத் திருப்பிக் கொடுக்கவேண்டும். ஆகவே, உண்மையாகவே, கடவுள்மீது பக்தி செலுத்துகிறோமென்றால், அதற்குள்ள ஒரே வழி, மனித இனத்துக்குத் தொண்டு செய்வதுதான்."

பம்பாய்
மே 11

- எம். அனந்தசயனம்
பாராளுமன்றத் தலைவர்.

நகைச்சுவை 'நாடு!'

"இதனால், நீ, நான், என்மொழி, உன்மொழி என்கிறபேதம் உண்டாகிறது. இவ்வளவு பெரிய நாட்டுக்குப், பொதுவான ஒரு மொழி இருக்கவேண்டும். இல்லையா?" என்று நாட்டை யாண்ட சிந்தனைச் சிற்பி கேட்கலானார். அவரைச் சிந்தனைச் சிற்பி என்று ஒப்புக்கொண்டதால் அரசாங்கத்தில் பதவிகளை அடைந்த பலரும், 'ஆமாம் ஆமாம்' என்று தலையாட்டினர்.

எப்படி ஒரு பொதுமொழியை நிர்ணயிப்பது?—என்பது புரியவில்லை அவர்களுக்கு. எது பொதுமொழி?-ஒவ்வொரு இடத்திலும் போய்ப்பார்த்தால், அங்கங்கே, அவரவர்கள்பேசும்மொழி தான், பொதுமொழி போலத் தெரிந்தது. தத்தம் மொழியைப் பொதுவாக்க வேண்டுமென ஒருவருக்கொருவர் தோள் தட்டலாயினர். இந்தச் சண்டையால், பல்லாயிரக்கணக்கானோர் செத்தனர். கடைசியில், எல்லாம் பொதுமொழிதான்; ஆனால் சிற்சில காரியங்களுக்காக மட்டும் ஒரு பொதுமொழியை 'உற்பத்தி' செய்துகொள்ளவேண்டும் என்கிற முடிவுக்கு சிந்தனைச் சிற்பி வந்தார், இது அனைவருக்கும் கசப்பாயிருந்தது. பொதுவாக எல்லோருக்குமே கசந்ததால் ஏகமனதாக இம்முடிவை, ஏற்கலாம்; ஏனெனில் இதிலாவது ஒரு பொதுநிலையைக் காணமுடிகிறதே என்று முடிவெடுத்தார் அந்தச் சிற்பி!!

எல்லோருக்கும் பிடிக்காத மொழி பொதுமொழியாயிற்று.

"இனிமேல் ஒற்றுமை ஓங்கும்! எல்லோரும் ஒரு மொழியினர் ஆவார்கள்!!" என்று, சிந்தனைச் சிற்பி மகிழ்ந்தார். இந்த 'செயக்கொடி'யைக் காட்டிவிட்டு வருவதற்காக ஒரு உலகச் சுற்றுப் பயணமும் நடத்தினார்.

*

"ஆமாம், பலர் பலவிதமாக உடைகளை அணிந்துகொண்டால், அது எப்படி ஒரு நாடாகும். இதிலும் ஒரு தேசிய ஒற்றுமையை உண்டாக்கவேண்டும்", என்று நினைத்தார் சிந்தனைச் சிற்பியாயிருந்து இப்போது உலக சோதியாகிவிட்ட அந்த உத்தமர். பல தினுசான உடைகளை, மக்கள் அணிந்துகொண்டிருந்தது அவருக்குப் பிடிக்கவில்லை. இந்த விஷயத்திலும் தேசிய உணர்ச்சியை உண்டாக்க நினைத்தார் அவர்.

எந்த உடையைத்தேசியஉடையாக்கலாம்? — என்பதுபற்றிப் பெரிய அமளி ஏற்பட்டது. இதைப்பற்றி சச்சரவும், சண்டைகளும் மூளலாயின.

உலகசோதி யோசித்தார், "சண்டை வேண்டாம். நம் நாடு ஏழை நாடு. நாம் வெள்ளைக்காரர்களைப்போல 'பாஷனை' உடைகளைத் தேர்ந்தெடுக்கமுடியாது. சாதாரண மனிதனின் ஆடையே நம் நாட்டுத் தேசிய ஆடை" என்று அறிக்கை விடுத்தார். சாதாரண மனிதனைத் தேடிக் கண்டுபிடித்து, அவனுடைய உடையை ஆராய்ச்சி செய்து முடிவு காண்பதற்காக ஒரு கமிஷனையும் நியமித்தார். (தன்னுடைய மகளின் கணவனுக்கு, வேலை கொடுப்பதற்காக இந்தக் கமிஷன் நியமிக்கப்பட்டது என்று பலபேர் சொல்லிக்கொண்டார்கள்.) இந்தக் கமிஷன், ஊர் ஊராகப் போயிற்று. கண்காட்சி சாலைகள், புதை பொருள் ஆராய்ச்சி நிலையங்கள் எல்லாவற்றையும் போய்ப் பார்த்தது பல தையல் நிபுணர்கள், ஓவியர்களையெல்லாம் அழைத்துக்கேட்டது. கடைசியில், தேசிய உடை எதுவென்றும் கண்டுபிடித்தது. அது, வெளியிட்ட முடிவு:

"நம் நாட்டில் சாதாரண மனிதனைச் சந்திக்க நாங்கள் ஐந்தாண்டுத் திட்டம் போட்டு, பகீரத முயற்சிகள் செய்ததன் பலனாக, சாதாரண மனிதனின் உடை கோவணம் கட்டிக்கொண்டிருப்பதுதான் என்பதைக் கண்டுபிடித்துவிட்டோம். இதையே தேசிய உடையாக்கும்படி சிபாரிசு செய்கிறோம். இப்படிச் செய்தால், 'இந்த உடைதான் வேண்டும், அந்த உடைதான் இருக்கவேண்டும் என்கிற தகராறு எழவும் நியாயமில்லை. ஆகவே, எல்லோரும் கோவணம் கட்டிக்கொள்ளவேண்டும்"

அப்பாடா! தேசிய ஒற்றுமை உண்டாகிவிட்டது, இனிமேல் தகராறு இல்லை என்று உலக சோதி பெருமூச்சுவிட்டார். எல்லோரும் கோவணம் கட்டிக்கொள்வதுதான் தேசிய ஒற்றுமைக்கு அழகு என்று பிரச்சாரம் செய்ய, பரந்து விரிந்து கிடக்கும் தன்னுடைய அரசாட்சியெங்கும், ஒருசுற்றுப்பயணம் நடாத்தினார்.

ஒரு சகா, ஒருநாள் கேட்டார், "ஏன் சார்? கோவணம்தான் தேசிய உடையென்று சொல்லுகிறீர்களே. ஆண்கள் விஷயத்தில் இது சரி. பெண்கள் என்ன செய்வது? அவர்களும் கோவணம்தான் கட்டவேண்டுமா?" என்று.

உலகசோதிக்கு, இதென்னடா புதுக்குழப்பம், என்று தலைவலி எழலாயிற்று. கேள்வி கேட்டவரை அழைத்து, இன்று முதல் எமது அரசில் நீரும் ஒரு மந்திரி இதைப்பற்றியெல்லாம் வாயைத் திறக்காதீர் என்று சொல்லி அவர் வாயையும் மூடிவிட்டு, "அப்பாடா! இனித் தேசம் ஒன்றாகிவிடும்" என்று பெருமூச்சு விட்டார்.

*

"மொழி! உடை! இரண்டும் ஒரே மாதிரியாகிவிட்டால் தேசியம் வந்துவிடுமா? அதோபாருங்கள் ஒவ்வொருத்தர் தலைகளையும்! உச்சிக்குடுமி! அப்பளாக் குடுமி! கிராப்பு! கொண்டை! இப்படி வேற்றுமைகள் இருக்கலாமோ? இதிலும் தேசிய ஒற்றுமை வேண்டாமோ!"-ஒரு பத்திரிகை எழுதிற்று. தன்னுடைய அகண்ட நிலப்பரப்பில் ஒற்றுமையையும் தேசிய உணர்ச்சியையும் உண்டாக்கவேண்டும் என்றே கனவு கண்டுகொண்டிருந்த அந்த உலகசோதிக்கு இதுவும் சரியென்றேபட்டது.

ஆமாமாம்! பிரிவினைக்கு இதுகூட இடம் கொடுத்துவிடும். தேசஒற்றுமைசீர்குலைந்துவிடும். நம்முடைய பாரம்பரியத்தையும், கலாச்சாரத்தையும் காப்பாற்றக்கூடிய வகையில், இதிலும் ஒரு ஒற்றுமையை உண்டாக்கவேண்டும்!—என்று கர்ச்சித்தார்.

அதுசரிய்யா! தலையில் முடி இல்லாதவன் என்னசெய்வான்? —என்று ஒரு மனிதன் கேள்வி போட்டான்.

அவனுக்கும் பதவிகொடுத்து, வாயை மூட முடியாது போகவே,

(15-ம் பக்கம் பார்க்க)

செய்வதையும் செய்துவிட்டு!

மலர் 17] ஆண்டுச் சந்தா ரூ. 8. (17—5—59) தனிப் பிரதி 16-காசு [இதழ் 44

அந்நியர்கள் ஆட்சியில் தொழில் வளம் பெருகாது.

எப்போதும்போல, வயலை நம்பியே நாம் வாழும் படியாகத்தான் செய்வார்கள்.

அந்த அவதியைத்தான் இன்று அனுபவிக்கிறோம்.

ஐரோப்பாவில், ஆலைகளை நாடி மக்கள் போகிறார்கள்.

நாமோ, வயலை நாடிப்போகும் மக்களைத்தான் இன்னும் வைத்திருக்கிறோம்.

வயல், எப்படி எல்லோருக்கும்போதும்? வளரும் வாலிபர்களுக்கு வேலைகொடுக்கத் தொழிற்சாலைகள் வேண்டாமோ!

ஏதோ அங்கே இங்கே என்று சில ஆலைகளை உண்டாக்கி வருகிறோம்.

ஆனால், அவைகளுக்கு வேண்டிய இயந்திரங்களை நாமா செய்கிறோம்? வெளியிலிருந்தல்லவா இறக்குமதி செய்யவேண்டியிருக்கிறது, இன்னும்!

ஜப்பானில், ஒருதடவைதான், வெளிநாட்டிலிருந்து ஒரு இயந்திரத்தை வரவழைப்பார்கள். பிறகு அதைப்பார்த்து, அவர்களே செய்துகொள்வார்கள்.

இரஷ்யாவிலும் அப்படித்தான்!

ஆனால் இங்கே, என்ன காண்கிறோம்? —50 ஆண்டுகளுக்கு முன்பு டாடா இரும்பு உருக்கு ஆலையை ஆரம்பித்தார்! அதைவைத்து வேறுபல இயந்திரங்களை ஏன் செய்யக்கூடாது? இப்போது ஒரு உருக்கு ஆலை வேண்டுமானாலும், வெளிநாட்டுக்குத்தான் மனுபோடவேண்டியிருக்கிறது!!

எனக்கென்னவோ இங்குள்ள தொழிலதிபர்களைப்பற்றித் திருப்தியேஇல்லை. முன்னோடிகள்போல, பெரிய தளபதிகள் போல, தங்களைக் காட்டிக்கொள்ளுகிறார்கள். அவர்களுக்குப் பணம் தருவது சர்க்கார்! பாதுகாப்புத் தருவதும் சர்க்கார்தான்!! ஆனால், என்னவோ தாங்கள் பெரிய காரியம் சாதிப்பதுபோலப் பேசிக்கொண்டு வலம் வருகிறார்கள். நான் பல பேரைப் பார்க்கிறேன். எதானாலும் சர்க்கார் செய்து தரவேண்டும் அவர்களுக்கு. கடன் வேண்டுமானாலும் நாம்தான் தருகிறோம்! கடனை வாங்கிக்கொண்டு பெரிய மனிதர்கள் ஆகிறார்கள் — காட்டிக்கொள்கிறார்கள்!!

எப்படி, இவர்களால்தான் காரியங்களைச்சாதிக்க முடியும் என்கிற எண்ணம் நமது பார்லிமெண்டு உறுப்பினர்களிடையிலும் வந்ததோ, புரியவில்லை எனக்கு.

சர்க்கார் நடத்தும் தொழில்களும் நன்றாகத்தான் நடக்கின்றன! நாமாகச் செய்யும்போது ஏற்படும் ஆர்வமே தனிதான்!!

*

அந்நியர் ஆதிக்கத்துக்குக் கண்டனம்-எந்த மண்ணில் அந்நியர்கள் இருக்கிறார்களோ, அங்கேதொழில் வளம் பெருகாது என்னும் விளக்கம்—முதலாளிகளுக்கு ஒரு தாக்கு—சர்க்காரே ஏற்று நடத்தும் தொழில்கள்தான் நன்றாக நடக்கும் என்று கருத்துரை—வழங்கியிருப்பது வேறுயாருமல்ல, பண்டித நேரு அவர்களேதான்.

இந்தக் கிழமை, புதுடில்லியிலே நடைபெற்ற காங்கிரஸ் காரியக் கமிட்டியிலே, இந்தக் கருத்துக்களை உதிர்த்திருக்கிறார்.

சூட்டோடு பேசினார் என்கிறது ஏடு! போயிருந்த நமது அமைச்சர்கள், நேரே ஊட்டியிலிருந்து சென்றதால் ‘குளுகுளு’வென்று அனுபவித்திருப்பார்களெனக் கருதுகிறோம்!!

நாட்டின் தொழில்வளம் பெருகாமைக்குக் காரணம், அந்நியனான வெள்ளைக்காரன்ஆண்டதால்தான் என்கிறார் நேரு. இதனை, நாம் மறுக்கவில்லை! வெள்ளையன் காலத்திற்றானே, இரயில் வந்தது, சில ஆலைமுறைகள் ஏற்பட்டன, விஞ்ஞானப் புதுமைகள் நாட்டுக்குக் கிடைத்தன என்று வாதாடக்கூடும் சிலர். அதுவும் உண்மைதான்!!

ஆனால், எந்தளவுக்குத் தன்னுடைய சொந்த மண்ணை வளமுள்ளதாக்க ஆங்கிலேயர் ஆசைப்பட்டனரோ, அந்த அளவுக்கு ஆசை கொள்ளவில்லை இங்கே. கொள்ளவேண்டிய அவசியமும் இல்லை.

அவர்களுக்கு மட்டுமல்ல, அவர்களைப்போல, காலனி ஆதிக்கத்தை ஏற்படுத்திக்கொண்ட எந்த அந்நியரும், காலனிகளை 'மார்க்கெட்'டுகளாகக் கருதிச் சுரண்டிச் செல்வதுதான் வழக்கமே ஒழிய, சுக சோலையாக ஆக்குவதென்பது, அரசியல் வரலாற்றில் கிடையாது. ஒன்றிரண்டை வெள்ளையன் செய்தான் என்றால், அவனை விட்டு மனச்சாட்சி அறவே போய் விடவில்லை என்று பொருள்.

வெள்ளையனால் விபரீதம் விளைந்தது எனச் சொல்லும் நேரு பண்டிதர் குழாத்துக்கு அந்தளவுக்காவது மனச்சாட்சி இருக்கிறதா? விளக்கமாகச்சொல்கிறார், ஆண்ட அந்நியன் சிரத்தை கொள்ளாத காரணத்தினால்தான், ஐரோப்பிய நாடுகளெல்லாம் தொழில்வளம் பெருகி விளங்கும் இந்த நூற்றாண்டிலும் 'இந்தியா' இன்னும் ஆரம்ப நிலையிலிருக்கிறது என்று!! இந்த 'இந்தியா'வுக்குள் அடைபட்டிருக்கும் தென்னாட்டை வைத்து ஒப்பிட்டால், நாம் என்ன சொல்வது? ஆமதாபாத்தும் பம்பாயும் உண்டு வடக்கே! சித்தரஞ்சனும் பிலாயும் இருக்கிறது வடக்கே! பக்ராநங்கலும் தாமோதர நதிப் பள்ளத்தாக்கும் உண்டு வடக்கே! இப்படி ஆலையூராக, வளத்தூராக வடக்கு விளங்குவதைப் புள்ளி விபரங்கள் காட்டும்.

இதே நிலை வளருமானால் தென்னாடாகிய நமது பூமியின் கதி என்ன? நேரு சொல்வதுபோல, வயல் ஒன்றுதான் நமக்கு! உழவு ஒன்றுதான் தொழிலாக இருக்கும்!! பிற்காலத்திலே வரும் பேரப்பிள்ளைகள், பேசுவார்கள்— வடநாட்டுக்கு அடிமைப்பட்டுக் கிடந்ததால், தென்னாட்டில் ஆலைவளம் பெருகாமல் போய் விட்டதென்று!!

ஆலைவளம் பெருகும்போது, புதிய புதிய இயந்திரங்களை இங்கேயே செய்துகொள்ளும் சூழ்நிலை உருவாகவேண்டும். ஒவ்வொரு இயந்திரத்துக்கும் வெளிநாட்டை எதிர்பார்க்கும் தன்மை ஒழியவேண்டும் என்கிறார், நேரு. அப்படி ஆலைகளை அமைக்க வேண்டுமானால், அதற்கான இரும்பு உருக்கும் பெரிய ஆலைகள் மிகமிக அவசியம். அப்படிப்பட்ட இரும்பு உருக்கு ஆலைகள், வடக்கே, பீகாரிலும் அசாமிலும் ஏற்படும் நிலை, உண்டாக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தெற்கே ஒரு ஆலையுண்டா? இப்படி கேட்ட சேலத்து என். வி. இராமசாமிக்கு, 'மந்திரி'ப்பதவி கிடைத்ததே தவிர, ஒரு உறுதிமொழியும் தரவில்லை டில்லி!!

ஆலைகள் இல்லை— ஆலைகளைச் செய்வதற்கு அடிப்பீடமான இரும்பைக் காய்ச்சி எடுக்கும் பேராலையும் இல்லை தெற்கே. எப்படி நமது பகுதி முன்னேற்றமடைய முடியும்?

அவரே சொல்கிறார், அந்நியனை நம்பியதால் நமக்கு இருக்கும் தொழில்செய்யும் கூடமெல்லாம் வயல்தான் என்று! இன்று, அந்நியனை நம்பிக்கிடக்கும் தென்னாட்டின் எதிர்கால நிலையும் அதுதானே!!

ஜப்பானில் ஒருதடவைதான் இயந்திரத்தை வரவழைப்பார்கள்—பிறகு, தாங்களே செய்துகொள்ளப் பார்ப்பார்கள் என்று உருக்கமாகத் தெரிவிக்கிறார்.

ஜப்பானியரைப்போல இங்கு என்சினீயர்களில்லையா, நிபுணர்கள் பஞ்சமா என்றால், "இங்குள்ள என்சினீயர்கள், நிபுணர்களைப்போல்த் திறமைசாலிகள் எங்குமில்லை," என்றும் அவரே சொல்கிறார்.

திறமைசாலிகளுமிருந்தும், காரியம் நடக்கவில்லையெனில் அது யார் குற்றம்? பத்தாண்டு காலமாக ஆட்சிப் பொறுப்பை வகிப்பவர் நேரு! இது யார் குற்றம்?

வேதனைப்பட்டுக்கொள்கிறார், ஆலையரசர்கள், சர்க்காரிடமே கடன்வாங்கி, தங்கள் ஆலைகளைப் பெரிதாக்கிக்கொண்டு, சர்க்காரையே மிரட்டுவதாக. இதுவும் யார் குற்றம்? யரர் தரச் சொன்னார்கள், இந்த ஆலையரசர்களுக்குப் பணம்?

டாடாவைப்பற்றிக் குறைபட்டுக் கொள்கிறார். இதே டாடா நிர்வாகத்துக்குத்தான் கடந்த ஆண்டில், டில்லி சர்க்கார், அமெரிக்காவிடம் 55 கோடி ரூபாய்க்குக் கடன் ஏற்பாடுசெய்து கொடுத்தது. ஏன் அதைத் தடுத்திருக்கக்கூடாது, பண்டிதநேரு? அது மட்டுமல்ல, தனிப்பட்டோரின் தொழில் வளர்ச்சிக்கு நிதி உதவுவதற்கென ஒரு அமைப்பும் நிறுவப்பட்டு, கோடிக்கணக்கான ரூபாய்கள் கொட்டிக் கொடுக்கப் பட்டுமிருக்கிறது!!

இப்படித் தனிப்பட்டோரின் 'கொழுப்பு' வளருவது சரியல்ல என்பதைத்தானே, நம்மைப்போன்றோர், எடுத்துச் சொல்லி வருகிறோம். இதுபோன்றவைகளை, தேசிய உடைமையாக்குவதுதான், தங்களது திட்டம் என்று, சுதந்திரத்துக்கு முன்பு, நேரு போன்றோரும் கர்ச்சித்தது உண்டே!

நேரு, மக்கள் தலைவர்! உலகத் தலைவர்! அவருக்குள்ள செல்வாக்கு யாருக்கும் கிடைக்காது! அவருக்குப் பின் வரப்போகிற, எந்தத் தலைவருக்கும் இவ்வளவு சக்தியும் செல்வாக்கும் கிடைக்கப்போவதில்லை! —அப்படியிருக்கும்போது, இவரன்றோ, முன்னின்று இந்த நற்செயலுக்கு துவக்க விழா செய்திருக்க வேண்டும். இவ்வளவு சக்தி வாய்ந்தவரே, பணமுதலைகளைக் கொழுக்கவைத்துவிட்டுப் பிறகு உட்கார்ந்து குமுறுகிறாரென்றால், இவருக்குப் பின்னால் வருகிறவர்களால், கொழுத்த புலிகளை என்ன செய்யமுடியும்?

குறைபட்டுக்கொள்கிறார் நேரு, பார்லிமெண்டில் கூடத் தங்களுக்குப்பக்கபலம் தேடிக்கொண்டிருக்கிறார்கள், பண அரசர்கள் என்று. அவர் மறந்தார் எனக் கருதவில்லை, நாம். நேரு போன்றோரே, பணம் படைத்

(13-ம் பக்கம் பார்க்க)

ஒரு பாடம்

கா. சு. அறிவுக்கொடி

கடல் கடந்து அயல்நாடுகளுக்குச் சென்று வாணிபம் நடத்தி வரலாறு கண்ட பண்டைத் தமிழகத்தின் குடிகள் இன்று நலிந்தும் சரிந்துமாக இருக்கிறார்கள் என்பதற்கு ஈழத்தமிழர்கள் தங்கள் வாழ்வைப் பறிகொடுத்ததே ஒரு சோகக் காவியமாகும்.

தமிழகத்தில் வாழவழியில்லையே! கடல் கடந்து அயல் நாடுகளுக்குச் சென்றாவது பிழைப்போம் என்று இலங்கை, மலேயா, பர்மா, சிங்கப்பூர்நாடுகளிலே தஞ்சமடைந்தார்கள் தமிழர்கள். காடுகளாயும் மேடுகளாயும் கிடந்த இடங்களையெல்லாம திருத்திக் கழனியாக்கி வளத்திற்காக அரும்பெரும் பாடுபட்ட தமிழர்கள் இன்று ஆயிரக் கணக்கிலே அடித்து விரட்டப்படுகிறார்கள். இன்னவிதம் தான் என்று எடுத்து இயம்ப இயலாத நிலையை ஈழத் தமிழர்கள் பெற்று வருகிறார்கள் என்பதைச்சரித்திரம் எடுத்துக்கூறும். கடந்த காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளைச் சிங்கள வெறியர்களால் துண்டு துண்டுகளாக வெட்டப்பட்ட ஒவ்வொரு தமிழனின் தமிழச்சியின்—வெந்துபோன உறுப்புக்கள் வந்துபேசும் போது வரலாறு கண்ட தமிழனின் நிலை இப்படி ஏற்பட்டு விட்டதா இன்று என்று இதயம் புண்ணுகிறது! ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் கொலையுண்டு இருக்கிறார்கள். ரூ. 30 கோடி தமிழர்களின் சொத்து அழிக்கப்பட்டு இருக்கிறது. அத்தோடின்றி கன்னித்தமிழ்நாட்டுப் பெண்களின் கற்பு, சிங்களவெறியர்களால்சூறையாடப்பட்டு இருக்கிறது! கொள்ளையடிக்கப்பட்டன--அழிக்கப்பட்டன. வீடு இழந்து, கடை இழந்துபோன தோடின்றி 'கள்ளத்தோணி'— என்ற பட்டத்தோடு உதைபட்டு தமிழ்நாட்டுக்கு ஓடிவந்தார்கள். (8,842 பேர்கள்) — கன்னித்தமிழ் நாட்டிலே மீண்டும் காலடி எடுத்து வைத்த தமிழர்களுக்கு உதவி கோரியபோது, டெல்லி எசமானர்களைக்கேட்டுப்பார்க்கவேண்டும்-நம்மால் ஒன்றும் உதவி செய்ய இயலாது' எனக் கைவிரித்து விட்டார்கள் நமது மதிப்பிற்குரிய மாநில அமைச்சர்கள்.

ஏகாதிபத்திய-ஆணவ வடநாட்டாதிக்கம் இலங்கையில் இருந்து விரட்டப்பட்ட தமிழ் அகதிகளுக்கு உதவிசெய்ய அப்படி ஒன்றும் பணவசதி இல்லை, எனக் கைவிரித்துவிட்டது.

இங்கேதான் இந்த இலட்சணம் என்றால், கோடிக்கணக்கானசொத்துக்களை இழந்த இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு இலங்கை சர்க்கார் ஏதாவது உதவி புரியுமா என்று எதிர்பார்த்தபோது, இலங்கையின் சர்வாதிகாரியும் சிங்கள வெறியனுமான இரும்பு இதயம் படைத்த பண்டார நாயகா — இலங்கையில் சொத்து இழந்து தவிக்கும் தமிழர்களுக்கு எவ்வித உதவியும் கிடையாது என்று கூறி விட்டாராம்! இத்தோடின்றித் தமிழர்கள் சிறுபான்மையினர்தானே என்ற முறையிலே என்னவேண்டுமானாலும் செய்யலாம் என்ற எண்ணத்தில் தோட்டங்களில் வேலை செய்வோர் மட்டுமின்றி வர்த்தக நிலையங்களில் இருந்தும் தமிழர்களை விரட்டத்திட்டமாம்! வர்த்தக நிலையங்களில் பணிபுரியும் அத்தகையோரது சேவை அத்தியாவசியம் இல்லாதிருப்பின், அவர்களை விரைவில் இலங்கையில் இருந்து துரத்திடவேண்டும் என முடிவாம். தோட்டங்களில் பணிபுரியும் இந்திய மருத்துவர்களை விரட்டிவிட்டு அந்த இடங்களில் இலங்கையரை நியமிக்க மருத்துவ இலாகா வழி செய்யவேண்டும் என அமைச்சர் கூறி இருக்கிறாராம். இலங்கையின் 11-வது சுதந்திர தினத்தன்று சிறுபான்மையினர் நீதிக்காக வெற்றி வேண்டும் என்பதைக் காட்ட துக்க தினமாகக் கொண்டாடுகையில் வெற்றிக்கான குரல் எழுப்பினராம்! அது சம்பந்தப்பட்ட தலைவர்களையும் கட்சிகளையும் ஒடுக்கியிருக்கிறதாம் சிங்கள வெறிகொண்ட பண்டா அரசு!

தமிழர்களுக்கு ஏற்பட்ட — ஏற்பட்டு வரும் அநீதிகளைக் கண்டும் இரும்பு இதயம் படைத்த டெல்லியோ — "பச்சைத் தமிழராட்சி" என்று சிலரால் சொல்லப்படும் தமிழ்நாட்டு அரசாங்கமோ இது பற்றி எவ்வித நடவடிக்கையும் எடுக்காது இருப்பது நியாயமல்ல, நீதியல்ல! எப்படியும் டெல்லி எசமானர்களிடம் முறையிட்டு நிச்சயம் பரிகாரம் தேட முற்படவேண்டியது முதல் வேலையாகும்.

இலங்கை கலவரத்தினால் ஒரு சில வடவரேனும் பாதிக்கப்பட்டு இருப்பார்களேயானால் 'ஆயிரம் தேள் கொட்டியது'போல் அலறி இருப்பார் பண்டிதர். ஏன்? இந்நேரம் ஐ. நா. சபை வரை சென்று முறையிட்டு இருப்பார் என்பதில் என்ன சந்தேகம்? இலங்கைத்

தமிழர் படும் இன்னலைக் கண்டு பண்டாராவைக் கூட்டிப் பரிகாரம் தேடமுற்படாத நேரு ஒரு நேர்மையான மனிதரா?

ஆனால், தான் அல்ஜீரிய மக்களுக்கு மதிப்பு வாய்ந்தவராய் எடுத்துக்காட்ட 'அல்ஜீரியாவில்நிகழ்ந்த படுகொலையை வன்மையாகக் கண்டிருகிறேன்'—என்று அல்ஜீரியப் படுகொலைபற்றி மேடையதிரப் பேசினார்!

அப்படிப்பட்ட நேரு இலங்கைத் தமிழர்களின் இன்னலைக் கேட்டும் பேசாததேன்? ஆப்ரிக்காவில் நிகழும் நிறவெறியைக் கண்டிக்கிற நேரு இலங்கைத் தமிழர்களின் படுகொலை நிகழ்ச்சிக்கு மௌனம் சாதிப்பதேன்?

இதற்கெல்லாம் காரணம் நேருவும் பண்டாராவும் இலண்டனிலே படித்தவர்களாம்-பழகியவர்களாம்! ஆகையினால்தான் இலங்கைத் தமிழர்கள் சிந்தும் கண்ணீரைவிடப் பண்டாராவின், புன்முறுவலேபெரிதெனக் கொண்டிருக்கிறார்போலும்! 'தணலிலே சிக்கிய புழுப்போல் தவிக்கும்' தமிழர்களின் துயரத்தைவிட, டெல்லி எசமானர்களின் உறவே பெரிதாக மதிக்கிறது, பச்சைத் தமிழர் ஆட்சி! இலங்கைத் தமிழர்களின் நிலையைக்கண்டு நெஞ்சிலே இரக்கமற்ற டெல்லி ஏகாதிபத்தியம்— ஏகாதிபத்தியத்தின் அதிபதி நேருவும் தமிழர்களுக்கு உதவி செய்யவில்லை, ஆனால் தன் வட இனத்தான் அன்று அகதி என்ற நேரத்திலே, தானே அகதியானதுபோல் வட அகதிகளுக்கு அரும்பாடுபட்டு இந்தியாவெங்கும் நிதிதரச் சொன்னீர்களே, மறந்துவிட்டீர்களா? வட அகதிகளுக்கு வாழ்வளிக்க 345 கோடி ரூபாயை திரட்டித் தந்தீர்களே! இதில் தமிழர் பணம் இருக்கிறதே! இதை எண்ணிப் பார்த்ததா இதயம் இல்லாத டெல்லி?- இதுமட்டுமின்றி உதவிக்காக டெல்லி தமிழ்நாட்டை நாடியபோதெல்லாம் தமிழர்கள் வாரித் தந்தமையை மறந்துவிட்டார்களா? பூகம்பம்—பஞ்சம் என்றெல்லாம் அறிவித்தீர்களே! நிதிதாரீர்என்று கைநீட்டினீர்களே! அப்பொழுதெல்லாம் இலட்சக் கணக்கிலே வாரித் தந்தோமே! இதை மறந்தா விட்டது டெல்லி? அகதி நிவாரண நிதி என்ற பெயரிலே தமிழர்களது பணம் வட அதிகளுக்கு வாழ்வளிக்க உதவியது. காந்தி நிதிக்கு தமிழ்நாட்டுப் பணம் வடக்கே பயன்பட்டது. கஸ்தூரிபாய்க்கு நிதி திரட்டியபோது உதவினார்கள் தமிழர்கள். இன்னும் தமிழர்களது பணம் வடக்கே ஏற்பட்ட பூகம்பத்திற்கு—வெள்ளப் பெருக்கத்திற்கு — பஞ்சத்திற்கு பயன்பட்டது. தமிழர்களது தாராள மனப்பான்மைக்கு இவைகள் எல்லாம் ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தன. அப்படித்தந்துதவிய தமிழர்களின் இன்றைய நிலைகண்டு டெல்லி ஏகாதிபத்தியத் தலைவர் நேரு இதைக் கொஞ்சமாவது எண்ணிப் பார்த்தாரா? இலங்கைத் தமிழர்களின் கண்ணீரைவிடப் பண்டாராவின் புன்முறுவலே பெரிதெனக் கருதி இருக்கிறார். மனிதஇதயமும்-தூய எண்ணமும் கொண்டவர்கள் டெல்லி அரசாட்சியின் அநீதியை-நன்றிகெட்ட செயலைக் கண்டு வேதனைப்படாமல்இருக்கமுடியாது. அதுதான் போகட்டும் என்றால், 'உண்ட சோற்றுக்கு இரண்டகம் நினைப்பது'போல் தமிழர்களுக்கு உதவியும் செய்யக்கூடாதெனவும் கூறிவிட்டார்களாம். "இலங்கையில் நடைபெற்ற கலவரங்களில் பாதிக்கப்பட்டோர்களுக்கு நஷ்டஈடு தரவேண்டியதில்லை" என்று இலங்கை அரசுக்கு, அமைச்சர்களைக்கொண்ட குழு அறிவித்து இருக்கிற செய்தி கேட்டதும், "வெந்த புண்ணிலே வேலைக் கொண்டு சொருகுவது" போல், போதாதற்கு இலங்கைத் தமிழருக்கு இந்த அநீதியை வேறு செய்து இருக்கிறது இந்திய அரசு!

ஆண்டுதோறும் கோடிக்கணக்கான பணத்தைக் கொள்ளையடிக்கிறதே தமிழ்நாட்டில் இருந்து டெல்லி; இதில் ஒரு தொகையை உதவி இருக்கலாம். கடந்த பதினொருஆண்டுகளாய்த் தமிழ்நாட்டு மக்களின் உழைப்பையும் பொருளையும் 1000 கோடி ரூபாய் அளவிலே சுரண்டி இருக்கிறதே! இதிலே ஒரு சிறு தொகையைத்தந்திருக்கலாம். இதற்குக்கூட மனம் இல்லாத— இரும்பு இதயம் கொண்ட டெல்லியுடன் நாம் உறவாடிக்கொண்டிருப்பது கொஞ்சமும் நியாயமில்லையே? ஆனால் அதே நேரத்தில் வடநாட்டு அகதிகளுக்கு வாழ்வளிக்க வடநாட்டிலே திட்டம் ஒன்றை அமுலாக்கி இருக்கிறது. இங்கே ஈழத் தமிழர்கள் 'இருதலைக் கொள்ளி எறும்பைப்'போல் துடித்துக்கொண்டு இருக்க அங்கே வடக்கிலே 'தண்டகாரண்யத் திட்டத்தை' அமுலாக்கி இருக்கிறது டெல்லி ஏகாதிபத்தியம்.

வாழ்க்கையில் சொத்து இழந்து, சுகம் இழந்து வாழ வழியில்லை என்று இன்று எண்ணற்ற அகதிகள்கண்ணீர் வடிக்கிறார்கள். அவர்களின் கண்ணீரைப் பந்நீராக மாற்றவேண்டியது நமது கடமையாகும். அவர்களுக்குப் புதுவாழ்வளிக்கும் பொருட்டு 100 கோடி ரூபாய் செலவு செய்து தண்டகாரண்யத் திட்டத்தை அமுலாக்கி இருக்கிறோம். என்று 80,000 சதுர மையில் நிலப்பரப்பில் வீடு—மற்றும் பல வசதிகளையும் வட அகதிகளுக்கு அளித்து இருக்கிறது டெல்லி ஏகாதிபத்தியம்.

இந்தச் செய்தி கேட்ட நாம்—ஈழத் தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கும்இழிநிலையைப் போக்கமுனையாத டெல்லி தன் இனத்தவரான வட அகதிகளுக்கு வசதி செய்து தந்திருப்பதைக் காணும்போது வேதனை கொள்ள வேண்டிருக்கிறது.

'நாடு அற்றவர்' — என்று துரத்தியடிக்கப்படுகிறவர் அகதி—ஆனால் இதில் கூடப் பாரபட்சம் ஏன்? வடக்கத்தியவன் — தன் இனத்தவன்தான் அகதியாம். ஆனால் ஈழத்தில் இருந்து சொத்துக்களைப் பறிகொடுத்துத் துரத்தியடிக்கப்பட்டவன் அகதி அல்லவாம்! டெல்லியின் 'ஒருகண்ணிலே வெண்ணையும் ஒருகண்ணிலே சுண்ணாம்பும் தடவும் பாரபட்சத்தை நன்கு உணரும்போது டெல்லியின் பிடியிலே வாழக்கூடாது — வாழமுடியாது — என்பதை நன்கு உணர முடிகிறது. இதில் இருந்து நமக்கு 'ஒருபாடம்' —என்பதை நன்கு உணரவேண்டி இருக்கிறது. வடநாட்டு ஆதிக்கத்தின் பிடியிலே வாழக்கூடாது என்பதற்கு ஏற்பட்டிருக்கும் ஒரு பொன்னான சந்தர்ப்பம் அல்லவா இது.

திராவிடக் குடியேற்றம்

கோவை கிழார்

மக்கள் நடமாட்டங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்த ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்கள் எந்த நாட்டை எடுத்துக்கொண்டாலும், அந்த நாட்டு மக்கள் பிற நாடுகளிலிருந்தே அந்த நாட்டிற்கு வந்திருக்கவேண்டும் என்று உறுதியுடன் கூறுகிறார்கள். அண்மையிலே கூட பல ஆராய்ச்சியாளர்கள் இந்த நடமாட்டக் கொள்கைகளைப்பற்றிப் பல உறுதியான கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்கள். அவைகளுக்குச் சான்றுகளும் இருப்பதாகக் கூறுகிறார்கள். ஒவ்வொரு குலமும் பிற நாடுகளிலிருந்து வெவ்வேறு காலங்களில் வந்திருந்தால், அந்த நாட்டிலே பண்டைய காலத்திலே இருந்த குலம் எது என்பதைப்பற்றிச் சரியான விளக்கம் இருப்பதில்லை. பொதுவாகஎல்லாஆராய்ச்சியாளர்களும் மத்திய ஆசியாவிலிருந்தே வெவ்வேறு மக்கள் பிற நாடுகளுக்குக் குடியேறினார்கள் என்று கூறுகிறார்கள். அப்படி எல்லாக் குலங்களும் மத்திய ஆசியாவில் இருந்து குடியேறியிருந்தால், அந்த இடம் எத்தனை மக்களை உற்பத்தி செய்ததோ? இது மிகவும் வியக்கத்தக்க ஒரு செய்தி ஆகும். முதலில் திராவிடர்கள் அங்கிருந்து வந்தார்கள். பிறகு ஆரியர்கள் அங்கிருந்து கிளம்பினார்கள். அந்த ஆரியர்களிலும் பல பிரிவுகள் இருந்தன. ஒன்று இந்தியாவிற்கும், மற்றப் பல பிரிவுகள் ஐரோப்பாவிற்கும் சென்றன. சில பாரசீகத்திற்கும் சென்றன. அப்படிக்கொள்ளில் மத்திய ஆசியா மிகச் செழிப்பு வாய்ந்த குடிப் பெருக்கத்தைக் கொண்டதாக இருந்திருக்கவேண்டும் அல்லவா? அப்படி இருந்திருக்குமா?

சில ஆண்டுகட்குமுன் வியன்னா நகரத்தில் ஒரு பெரிய ஆராய்ச்சி மாநாடு நடைபெற்றது. அதில் பல பெரியார்கள் பல ஆராய்ச்சி விரிவுரைகளை நிகழ்த்தினார்கள். அவைகளில் ஒன்று தென் இந்தியாவில் திராவிடர் குடியேற்றத்தைப்பற்றியது. அதனை விரித்தவர், Doctor-Furer—Hoimendorf என்ற ஐரோப்பியர். அவர் சொன்னதாகக் கூறியுள்ள கோட்பாடு என்னவெனில், திராவிடர்கள் முதலில் 'ஈரான்' என்று தற்போது வழங்கும் பாரசீகத்திலிருந்தவர்கள் என்றும், பிறகு அங்கிருந்து வடமேற்கு மூலைகளின் வழியாக இந்தியாவில் புகுந்தார்கள் என்றும், பிறகு மெல்ல மெல்லத் தென் இந்தியாவில் தங்கினார்கள்என்றும் கூறி, அது நடந்தது கிறிஸ்து பிறப்பதற்கு முன் 300 ஆண்டுகளின்போது என்றும் வற்புறுத்துகிறார். அந்த மாநாட்டில் இதற்கு யாதொருதடையும் சொல்வாரின்றி, அதை அப்படியே ஏற்றுக்கொண்டு பல் மொழிகளிலும், நாடுகளிலும் இதனை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இக்கொள்கையைத் தமிழறிந்த மக்கள் எவரேனும் ஏற்றுக்கொள்வார்களா?

தென்னாட்டுச் செய்தித்தாள்கள் பலவற்றிலும் இந்தக் கொள்கை வெளிவரவே, சில அறிஞர்கள் இதனைக் குறித்து எழுதியும் வைக்கத் தொடங்கினார்கள். சில ஆண்டுகட்குமுன் வந்த இந்து'ப் பத்திரிகையில், ஒரு ஆசிரியர் இதனைத் தழுவி எழுதி 'திராவிடர்கள் தென்னிந்தியாவின் நிரந்தரக் குடிகள் என்று சில பேர் பெருமை பேசிக்கொள்வது இப்போது தகர்த்து விடப்பட்டதென்றும், திராவிடர்களும் பிற நாடாகிய வடமேற்குத் திக்கிலிருந்தே வந்தவர்கள் என்று நிரூபிக்கப் பட்டுவிட்டதென்றும், அது நடந்த காலம் 300 கி. மு. என்று ஐரோப்பிய நிபுணர் கூறியிருப்பதாகவும், ஒரு வேளை இன்னும் சிறிது பண்டைய நாள் என்று கொண்டால் 1000 கி. மு. வில் இருக்கலாம் என்றும், அவர்களில் சிலர் மைசூர் பீடபூமி வழியாக வந்திருக்கலாம் என்றும், 'மற்றும் சிலர் ஒரிசா வழியாக வந்திருக்கக் கூடும் என்றும் ஒரு கடிதம் எழுதியிருக்கின்றார். இந்தக் கொள்கைகள் எப்படிப்பட்டவை என்றும், எதுகாறும் நாம் ஒப்புக் கொள்ளக்கூடியவை என்றும் ஒரு சிறிது ஆராய்வோம்.

கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் திராவிடர்கள் அல்லது தமிழர்கள் தென்னிந்தியாவிற்குக் குடியேறி வந்தார்கள் என்றால், அது ஆரியர்கள் வட நாட்டிற்கு வந்ததன்பின் வெகு நூற்றாண்டுகளுக்குப் பின்னே ஆகும். அதாவது ஆரியர்கள் வடநாட்டிற்கு வந்த பிறகு அங்கே நன்றாக வேரூன்றி ஆளத் தொடங்கிய பின்னர், பாரசீகத்திலிருந்து தமிழர்கள் வடநாடு மூலமாகத் தென் நாட்டிற்கு வந்தார்கள் என்று ஏற்படும். அதுகாறும் தென் நாட்டிலே எந்தக் குலத்தார்கள் இருந்தார்களோ, அவர்கள் என்ன ஆனார்களோ? தமிழர் நாகரிகமும், அவர்களுடைய அரசியலும் கிறிஸ்து பிறப்பதற்குப் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய்த் தென்னாட்டில் இருந்தது என்பதற்குச் சரித ஆதாரங்கள் இருக்கின்றன. அவைகளையறி

யாது ஐரோப்பிய நிபுணர் தமிழர்களைப் பிந்தியவர்கள் என்று கூறும் நோக்கத்துடன் இந்தக் கொள்கையை எழுதியிருக்கின்றார் என்று எண்ணவேண்டும். கி. மு. 3ஆம் நூற்றாண்டு என்றால் அசோகருக்குப் பிந்தி ஆகும். அசோகர் புத்த சமயத்தைப் பெருக்குவதற்கு தெற்கே தன்மக்களை அனுப்பிய போது, தெற்கே தமிழர்கள் இருந்திருக்கின்றனர். இதையெல்லாம் அறியாமல் காலத்தைப் பின்னே தள்ளிக் கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

இராமாயணக் கதை முழுவதும் கற்பனை என்று கொள்ளாமல் அதன் அடிப்படைச் செய்தி சரித உண்மை என்று கொள்ளுவர். அதாவது, வடநாட்டிலிருந்து ஆரியப்படையெடுப்பு தென்னாட்டிற்குச் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வந்திருந்ததென்பது எவரும் ஒத்துக் கொள்ளக்கூடிய ஒன்று. அக்காலத்தில் தென் நாட்டில் திராவிடர்கள் இருந்தார்கள் என்பதும் இக்காலத்தில் நம்புகிற ஒரு செய்தி ஆகும். ஆகவே அந்தச் செய்தி இந்தப் புதுக் கொள்கையினால் என்ன ஆகுமோ? இராமாயணப் படைபெடுப்பில் தென்னாட்டில் திராவிடர்கள் இல்லாமல், பின்னர் வந்திருந்தால் தென்னாட்டில் அப்போது இருந்த மக்கள் யார்? இப்புது ஆராய்ச்சியாளர் இதற்கு என்ன கூறுகிறார்? தமிழ் நாட்டு மூவேந்தர்களும் அந்தக் காலத்தில் செழிப்புடன் ஆண்டு வந்தார்கள் என்கிற செய்தியை மறுப்பதற்கு என்ன சான்றுகள் இருக்கின்றனவோ? இதனையும் ஆராயவேண்டும்.

இனிச் சிந்து நதி தீரத்தில் கண்டுபிடித்த புதை பொருள்களில், ஆரியர்கள் இந்தியாவிற்கு வருவதற்கு முன் இருந்தவர்களின் நாகரிகமே தெரிவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். அந்த நாகரிகம் ஒருதனிப்பட்ட நாகரிகம். அது திராவிடர்களின் நாகரிகம் ஆகுமென ஆராய்ச்சியாளர்கள் எழுதியுள்ளனர். அது நிகழ்ந்த காலம் கி. மு. 40 நூற்றாண்டுகளுக்கு முன் ஆகும். அப்படியாயின் அந்த நாகரிகத்தைக் குறித்துப் புதுக்கொள்கையாளர் என்ன கூறுவரோ? கி. மு. 3-நூற்றாண்டில்தான் திராவிடர்கள் பாரசீகத்திலிருந்து தென்னாட்டிற்கு வந்திருந்தால், சிந்துநதிதீரக் கலாசாரத்திற்கும் திராவிடர்களுக்கும் ஒரு தொடர்பும் இல்லாமல் போய்விடும். அப்படியாயின் சிந்துநதிப் பண்டைக் குடிகள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள்? இதனைப்பற்றிப் பண்டைய ஆராய்ச்சி முழுதும் செல்லத் தக்கதல்ல என்று மறுத்துவிட்டுப் புதிதாகக் கொள்கைகளைப் பரப்புகிறார்களோ?

பண்டைத் தமிழ் நூல்களின் படி தற்போதைய தமிழ்நாடு குமரிமுனைக்குத் தென்பால் வெகு தொலைவில் சென்றிருந்ததென்றும், அங்கே தமிழர்கள் சிறந்த பண்பாட்டோடு வாழ்ந்தனர் என்றும், பிற்காலத்தில் அந்த நாட்டைக் கடல் கொண்டதென்றும் அறிகிறோம். இந்த விவரங்கள் எல்லாம் தமிழ் அறியாத மேல் நாட்டு நிபுணர்களுக்கு எவ்வாறு தெரியும்? பிறர் மொழிபெயர்த்து எழுதிய சில கட்டுரைகளைப் படித்து ஒன்றுக்கு ஒன்றாக முரண்பட்ட கோட்பாடுகளை எழுதிவைப்பது எளிது. கூடியமட்டிலும் மற்ற மக்களுடைய பெருமையைக் குறைப்பதே இவ்விதமக்களுக்குப் பெருமைபோலும்! இவ்வாறே முன்னாளில் இந்தியாவிற்கு வந்த கிழக்கிந்தியக்கம்பெனி அலுவலாளர்கள் தமிழிலே தெனாலிராமன் கதைகள், பஞ்சதந்திரக் கதைகள் போன்ற தாழ்ந்த இலக்கியங்களைத் தவிர வேறு இல்லை என்று எழுதிவிட்டார்கள். தமிழில் புதைந்து கிடக்கும் மணி மணியான இலக்கியங்களை அன்னார்கள் அறியவில்லை. அதே காரணத்தினால்தான் தற்போது ஐரோப்பாவில் பிதற்றித் திரியும் நிபுணர்களும் ஆராய்ச்சிசெய்து வெளியிடுகிறார்கள். அவைகளைப் பின்பற்றி நமது நாட்டு மக்களும் ஒத்துப் பாடுகிறார்கள். என்னே அறியாமை!

கடைச் சங்கத்தார் காலம் கிறித்து சகாப்தத் தொடக்கத்தில் ஏற்பட்டது என்று எல்லா அறிஞர்களும் ஒத்துக்கொள்கிறார்கள். அந்தக் காலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முந்தியே இடைச் சங்கமும் முதற்சங்கமும் இருந்தன. அந்தக்காலத்து நூல்கள் மறைந்தன. முதற்சங்கத்திலேயே தொல்காப்பியம் இலக்கணமாக இருந்தது. ஒரு இலக்கணம் ஏற்படுவதற்கு அதற்கு முன் பல இலக்கியங்கள் இருந்திருக்க வேண்டும். "இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் இயம்பல்" முறையாகும். நாட்டுமொழி நிரம்பப் பெருகியிருந்தால் அன்றி இலக்கணம் வரையமுடியாது. நீக்கிரோ மொழிகளுக்கு இலக்கணம் உண்டா? இலக்கியம் இருந்தால் அன்றோ இலக்கணம் ஏற்படும்! ஆகவே தொல்காப்பிய காலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முந்தியே இலக்கியங்கள் பல தமிழில் இருந்து இறந்தன. அவைகள் கி. மு.-க்கு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்திருக்க வேண்டும். அவைகள் தென்னாட்டில் பிறந்தனவா? பாரசீகத்தில் பிறந்தனவா! இக்கேள்விக்கு ஐரோப்பிய நிபுணர் என்னவிடை அளிக்கப்போகிறார்? இவைகளையெல்லாம் ஆராயாது சில புத்தகக்கோட்பாடுகளை வெளியிடுவது சரியல்ல. இவைகளை மூளைக் கோளாறுகள் என்று தள்ளி ஒதுக்குவதே மேன்மை.

மேலும் திராவிடர்கள் தென்னாட்டிற்கு வடநாட்டிலிருந்து குடியேறித்தான் வந்தார்கள் என்று ஏனோ கொள்ளவேண்டும்? ஆதி காலத்தில் இருந்தே தென்னாட்டில் இருந்தவர்கள் என்று கொள்வதற்கு என்ன தடையோ அறியோம். ஐரோப்பியர்களுடைய பித்துக்கொள்கையைப்பற்றி எழுதுவதே இந்த அடிமை எண்ணமாகும். தென்னாட்டுப் பல்லவர்களைப்பற்றி எழுதும்போது அவர்கள் பாரசீகத்திலிருந்து காஞ்சிக்கு வந்தவர்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் வரைந்திருக்கிறார்கள். இதற்குக் காரணம் "பாஹ்லவ" என்ற சொல்லே அடிப்படை

போர் வீரர்கள் செல்வதற்கு முன் பாதை போடுவோர் கரடுமுரடான பாதைகளைச் செப்பனிட்டு முன்னே செல்வதுபோல நம்முடைய எதிர்கால சந்ததிகளுக்கு நாம் முள்ளும் கல்லும் புதரும் போல நம் சமுதாயத்தில் அடர்ந்துள்ள ஆபாசங்கள். ஊழல்களை அறவே ஒழித்து நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கிக் கொடுத்து விட்டுச் செல்வது நம்முடைய தலையாய கடமையாகும்.

ஆகும். ஒரு சொல்லில் இருந்து ஒரு கொள்கையை ஏற்படுத்துவது சரியான முறையாகாது. பல்லவர்கள் வெளிநாட்டார்கள் அல்லர். நல்ல தமிழர்களே. அவ்வரசர்கள் வடமொழியில் தேர்ச்சி பெற்றதற்குச்சமணசமயமேகாரணமாகும். அது கொண்டு அவர்களைப் பாரசீகர்கள் என்று கூறுதல் சரியன்று. அதுபோலவே தமிழ் மக்களையும் பாரசீகத்திற்குக் கொண்டு செல்லுதல் சரியன்று. அவர்கள் என்றைக்கும் தமிழ்நாட்டு மக்களே ஆவார்கள். குடியேற்றக் கொள்கைகளையெல்லாம் ஆரியர்களுக்கே விட்டுவிட்டுத் தமிழர்களைத் தென்னாட்டு நிரந்தர மக்கள் என்று கொள்வதே சரி என்க.

மொழி ஆராய்ச்சியானது சில கொள்கைகளுக்குக் காரண பேதமாக இருக்கிறது. ஆரியக் குடியேற்றக் கொள்கைக்கும் ஐரோப்பிய மொழிகளுக்கும் வடமொழிகளுக்கும் பொதுவாக உள்ள சில சொற்களே அடிப்படைக்காரணம். அதுபோலவே திராவிட மொழிகளில் உள்ள சில சொற்கள் இந்தியாவில் நடுப்பகுதிகளில் உள்ள பண்டை மக்களின் மொழிகளிலும் பெலுசிஸ்தானம் ப்ரூஹி முதலிய மொழிகளிலும் இருக்கின்றனவாம். இந்தக் காரணத்தைக்கொண்டு இம் மொழிகளைப் பேசுகிறவர்கள் எல்லாம் ஒரு காலத்தில் ஒரே குலத்தவர்கள் ஆக இருக்கக்கூடும் என்பது ஒரு கொள்கை. ஆம் இருக்கலாம். ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்குமுன் இந்தியா முழுவதும் திராவிடமயமாக இருந்த போது ஏன் இவ்விதமாக மொழி இணக்கம் இருக்கக்கூடாது? அதைக்கொண்டுமட்டும் பாரசீகத்திலிருந்து திராவிடர்கள் வந்து குடியேறினார்கள் என்று கூறவகையில்லை. தமிழ்நாடு குமரிக்குத் தெற்கேவெகு நூற்றுக்கணக்கான கற்கள்வரை எட்டி இருந்ததையும், கடல்கொண்டு போவதற்கு முன்னிருந்தே அது சிறந்த பண்பாட்டோடு விளங்கியிருந்தது என்பதையும் நோக்கும்போது திராவிடர்கள் என்ற பழந்தமிழர்கள் இங்கேயே இருந்தவர்கள் என்றும் பிறநாடுகளிலிருந்து குடியேறினவர்கள் அல்லர் என்றும் கொள்வதில் என்ன தடை?

★

பண நாயகம்

—[அ. பண்பு]—

"நீங்க ஒன்னும் சும்மா கொடுக்கலே, வேணும்னா நாலுபேரைக் கேட்டுப்பாருங்க."

இப்படியோர் உரையாடல் 'இரத்தக் கண்ணீர்' திரைப்படத்தில்!

கையில் குறைவில்லாத செல்வம் இருந்தது. வரம்பில்லாமல் விளையாடினான், விலைமாதின் மடிமீது கொட்டித்தீர்த்தான், செல்வமனைத்தையும்! இப்பொழுதோ...

கையில்காசில்லை; மெய்யில் பெருநோய், அழுகித்துர்நாற்றம் பரப்பும் கொடு நோய்! இந்த 'வெறுஞ் சக்கை'யினால் அவளுக்கு என்ன ஆகவேண்டும்? புறக்கணித்து ஒதுக்கிவிடலானாள்.

"இருக்கும் வரை எண்ணிப் பாராமல் எடுத்துத் தந்தேனே! இந்த நிலையில், 'போ, வெளியே!' என்கிறாயே!" என்னும்போதுதான், அவள், மேலே கண்டதுபோல் 'உண்மை'யை உணர்த்துகிறாள், 'நாலு பேரைக் கேட்டுப்பாருங்க!' என்று.

இப்படித்தான் அந்த எம்.எல்.ஏ.யும் சொல்கிறார் இன்று!

"......இப்படியெல்லாம் சொல்லி முடியாத அளவு தொல்லைப்படுகிறோம். உங்களுக்குத் தெரியாததா என்ன? கஞ்சிகூட இல்லை; உடுக்க, இதோ இந்தக் கந்தல்! குந்த, வெயிலுக்கும், மழைக்கும் வரவேற்புப் பாடும் ஓட்டைக் குடிசை! இடிந்த மண் சுவர்!! கொஞ்சம் தயவுபண்ணுங்கள்! அமைச்சரிடம் கூறுங்கள். ஆவன செய்யுங்கள்! உங்களை என்றும் மறவோம்! உயிர் கொடுத்ததாய் எனஎண்ணுவோம்; நன்றி பாராட்டுவோம்!" என்றெல்லாம் கதறினோம், ஏழ்மையை, இயலாமையை, தேவையை எடுத்துக் கூறி மன்றாடினோம்.

"சே! சே!! பொழுது விடிந்து பொழுது போகும்வரை இதே தொல்லை! இந்த 'ஏழை'க் கேட்டுக் கேட்டுச் சலித்துப்போய்விட்டது. இங்கே ஏன் வந்தோம் என்றாய் விடுகிறது; மறைந்திருந்தால்தான் உயிர் தப்பும்போலிருக்கிறதே!" என்று அவர் தமது 'பாரத்'தை எண்ணிச் சலித்தார்.

"நீங்களே இப்படிச் சொன்னால், எப்படி? எங்களுக்குப் பிரதிநிதி நீங்கள் தானே? எங்கள் குறைகளை எடுத்துச் சொல்லி, இயன்றதைச் செய்யத்தானே, உங்களுக்கு ஓட்டுப் போட்டோம்!"

திடீரென்று அவருக்கு முகம் சிவந்தது, மீசை துடித்தது, புருவம் வளைந்தது!

"என்னய்யா, ஓட்டுப் போட்டு விட்டீர்கள், மகா ஓட்டு! நீங்க ஒன்னும் சும்மா கொடுக்கலே, வேணும்னா நாலுபேரைக் கேட்டுப் பாருங்க!".

அவர் எங்கள் பண்ணையாருக்கு வாரிக் கொடுத்திருந்தார், ஓட்டுக் கேட்டு எங்களுக்கு வந்தபோது! அதைக் குறிப்பிட்டார்!

முணகிக் கொண்டே, வேறு வழியின்றித் திரும்பினோம்.

உண்மைதான்! சும்மா கொடுக்கவில்லைத்தான்! இலவசமாக, ஒரு வேளை சோறு கிடைத்தது, துண்டு வேட்டி கிடைத்தது, ஒரு ரூபாய்க்

காசும்கிடைத்தது,ஒவ்வொருவருக்கும்! இவை அனைத்தையும் விட "என்றும் உங்களுக்குப் பணி செய்து கிடப்பதே எனது கடன்" என்ற வெறும் மாயப்பொய் உறுதி கிடைத்தது, அவரிடமிருந்து. நம்பினோம்; நம்புமாறு செய்தது;பணம் புரிந்த படாடோபமும், பாசாங்கும்! அதற்குத் துணை நின்றன, எங்கள் வறுமையும், அறியாமையும்!! ஏமாந்தோம், இன்று ஏங்குகிறோம்!

இதே ஆள், அன்று——.

முழங்காலுக்கும் கீழே இறங்கிய கதர்ச்சட்டை, வேட்டி, அழகான குறிகட்டிய மடித்த வெள்ளைத் துண்டு, பொன் மின்னும், மூக்குக் கண்ணாடி, உயர்ந்த இனக் கார், சூழ நின்ற பெரிய மனிதர்கள்— ஆக எங்களிடம் வந்தபோது——.

மேடையிலே நின்று உணர்ச்சியோடு பேசினார்:

"இந்தப் பாரத மணித்திரு நாட்டின் மேன்மைக்காக, என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பும் உங்களுக்காக— என்னால் எவ்வளவு முடியுமோ, அவ்வளவு தொண்டு புரிவேன்!உங்கள் கவலைகள் ஒழிய, களிப்புப் பொங்கிட— வாழ்வு மலர இயன்றதைச் செய்வேன் என்று அண்ணல் காந்தியின் (படம்) முன்னிலையில் உறுதி கூறுகிறேன்!" இப்படி எல்லாம் சொன்னார்.

தொகுதியிலிருந்த கையோங்கிய பண்ணையாளர்களைக் கண்டு, ஓடி ஓடிப் பேசினார்; ஊர் ஊராகக் கூட்டங்கள் போட்டார்; "ஆகா ஊகூ, அப்படிச் செய்வேன், இப்படிச் செய்வேன்!" என்றெல்லாம் உறுதி சொன்னார். ஆனால்...?

பணம் நீராகப் பாய்ந்தோடிற்று. பார்த்த பக்கமெல்லாம் பண்ணையாளர்களின் முகத்தில் களிப்புப் பொங்கிற்று. எத்தனை பணம் கை மாறியதோ? என்னென்ன வசதிகள் ஏற்படுத்திக்கொடுப்பதாக உடன்பாடோ? தில்லுமுல்லோ? யார் கண்டது?

பண்ணைகள் தோறும் அன்று எவ்வளவு கோலாகலம்! கொண்டாட்டம்! கூலிகளுக்கெல்லாம் உணவு, காய்கறிகளோடு! ஆளுக்கு ஒரு ரூபாய், கையில்! அரையில் கட்டிட வேட்டி, துண்டு! வெற்றிலை—பாக்கு!

'ஆகா! இப்படியல்லவா, இருக்க வேண்டும்! எவ்வளவு தாராளம்! நம்மேல் எவ்வளவு அன்பு! எத்தகைய பரந்த மனம்! தொண்டு மனம்! தூய மனம்! எல்லாருக்கும் அல்லவா வாரித்தருகிறார்! இப்போதே இப்படி! இன்னும் சட்டசபைக்குப் போனால்! நமது குறை எடுத்துக்கூறி, நமக்கெல்லாம் நலம் புரியும்வாய்ப்பு ஏற்பட்டுவிட்டால்!! இவரன்றோ சட்டமன்றம் ஏற வேண்டும்! இவரைத் தேர்ந்தெடுப்பதில் அல்லவா நமது அறிவும் ஆற்றலும் சிறப்புறப்போகிறது! நன்மைபெறப்போகிறோம்! நமக்கும் பெருமை, அவர்க்கும் பெருமை! என்றெல்லாம் வியந்தோம், அன்றெல்லாம்! தேர்ந்தெடுத்தும் அனுப்பினோம்!

ஆனால் இன்று...

"சும்மா கொடுக்கலே!" என்கிறார்

நாட்டில் இல்லாமை தலைவிரித்தாடுகிறது, எங்கும்! அதைப் போக்க இயலாமை நிலவுகிறது, ஆட்சிப் பொறுப்பேற்றிருப்போரிடத்தில், இத்தனை ஆண்டுகளாக!

இடையே, பணத்தெய்வம் சிலரிடமே அடமானம் வைக்கப்பட்டிருக்கிறது — சிந்திக்கும் திறமையற்ற பாழும்சமுகத்தால்! துணிந்து செயலாற்றும் ஆற்றலற்ற முடமான சமுகத்தால்!!

வறுமையால் நொந்துபோன ஏழைமக்கள், வாழ ஏதொரு வழியுமின்றி வாடும் ஏழைமக்கள் பணத்தைக் கண்டால் போதும்! பல்லைக் காட்டிக்கொண்டு எதற்கும் தயாராகி விடுகிறார்கள். இழிசெயல் புரிவதா? அறிவை அடகுவைப்பதா? அடிமை ஆவதா?-என்றெல்லாம் எண்ணிப்பார்க்க எங்கே இயலுகிறது? பணம் திருவிளையாடல் புரிகிறது பரமனைப்போல! தேவைப்பட்ட மக்கள், மயங்குகிறார்கள்!

இந்த மிகச் சிறுபான்மையினர், பணத்தெய்வ வலிகொண்டு, பாமரரை, ஏழையரை....

அந்தோ! உழைப்பை உறிஞ்சுகிறார்கள்! உடலை ஓடாக்குகிறார்கள்! ஊசலாடும் உயிரைப்பற்றிப்பிடித்து வைத்துக்கொண்டு படாதபாடு படுத்துகிறார்கள்!! பாழடிக்கிறார்கள்!!! அன்றாடம், இப்படிப்பகிரங்கமாகக் கொடுங் கோரக் கொலைகள் புரிகிறார்கள், நூற்றுக்கணக்காக, ஆயிரக்கணக்காக! இந்தக் கொலைகளுக்குத் தண்டனை கிடையாதா? சட்டம் செல்லாதா? ஒன்றுமே, ஏதுமே செய்ய முடிவதில்லை! காரணம் **பணம் இருக்கிறது.**

எங்கும் இப்படி நிலவும் வறுமையைப் பயன்படுத்திக்கொண்டு, ஓட்டு வேட்டையாட வந்துவிடுகிறார்கள், தேர்தல் காலங்களில்! எளிதில் மாட்டிக்கொண்டு, பின்பு, துடிக்கிறார்கள் ஏழை மக்கள்! 'சனநாயகம்' ஓடி ஒளிந்துவிடுகிறது— அல்லது கொன்று, ஆழக் குழி தோண்டி, அமைதியாகப் புதைக்கப்படுகிறது! **'பணநாயகம்'** தலையெடுக்கிறது! பணம் படைத்தோர் ஆட்சியைப் பிடிக்கின்றனர், ஆட்டிப் படைக்கின்றனர்!

இந்த நாட்டில் இதுதான் சனநாயகம்! இப்படித்தான் வாழ்க்கை, அரசியல், கலை எல்லாமே நடக்கிறது!

இந்தநிலை நீடிக்கலாமா? கூடவே கூடாது, என்பர் நல்லோர்!

இந்த நிலை மாற...

ஒரு சிலரின் பெட்டிகளில் எல்லாச் செல்வமும் இருந்திடும் நிலைமை ஒழிந்திடல் வேண்டும்! வாழ்வும், உழைப்பும், வசதியும் எல்லோருக்கும் பொதுவாகவேண்டும்! உழைக்காத, பணத் திமிர் பிடித்த, அத்திமிரினால் ஏழையரைக் கசக்கிப் பிழிந்திடும் கொடிய சிறுபான்மையினர் இல்லாமல் ஆக்கவேண்டும்!

இந்த மாறுதலுக்கு. இந்தச் சமுகம் தயாராகும் நாளே, தமிழகத்தின் விடிவு நாளாகும்!

இதோ, சென்னைத் தேர்தல் வழிகாட்டிவிட்டது, இனிப் பணநாயகத்துக்கு இங்கு இடமில்லை என்பதைச் செயல் மூலம் காட்டிவிட்டது, பணமற்ற பராரிகள் பக்கம் மக்களின் ஆதரவு திரண்டுவிட்டது. இந்த நிலை, இங்கும், எங்கும் எப்போதும் நிலைத்து நிற்க நமது பணி அமையட்டும்.

★

உழைப்பு—அது நம்மைச் சூழும் கவலைகளிலிருந்தும், நம்மை அணுகும் அற்பத் துன்பங்களிலிருந்தும், நம்மைத் தாக்கும் தீய எண்ணங்களிலிருந்தும் விடுதலையளிக்கிறது,

நீருக்கு உழைத்தோம்!

மா. கி. த.

"பணத்தைத் தண்ணீர் மாதிரி செலவு செய்கிறுன்'' என்று சிலரைப்பற்றிச் சொல்வார்கள். ஆனல் கோடைகாலம் வந்துவிட்டால் காஞ்சிபுரத்து மக்கள் தண்ணீரைத்தான் பணம்போல் செலவிடுவார்கள். தண்ணீருக்கு அவ்வளவு தட்டு! இத்தனைக்கும் தொட்ட இடத்தில் நீர் ஊறும் பாலாறு பக்கத்திலேதான் ஓடுகிறது! பாலாற்று நீரைக்கொண்டு வந்து குடிநீர்ப் பிரச்சினையை ஓட்டிவிடவேண்டும் என்பது நகர மக்களின் நெடுநாளையகனவு. சென்ற சில திங்களுக்கு முன்தான் அதற்கான் அனுமதி கிடைத்தது நகர மன்றத்திற்கு. அனுமதி கிடைத்தது, ஆனல் அதை நிறைவேற்றி வைக்கவேண்டுமே! தண்ணீரைக் கொண்டு வருவதற்கான குழாய்கள் கிடைக்கவில்லை. அதனல் திட்டத்திற்கு அனுமதி கிடைத்தது என்ற திருப்தியிலேயே பல நாள் வேட்கை தணிந்துகொண்டிருந்தது!

இப்போது குழாய்கள் வந்துவிட்டன. குழாய்கள் வந்தால் போதுமா? குழாய்களைப் புதைக்கக் குழி வெட்ட வேண்டாமா? "இதென்ன அவ்வளவு பெரிய வேலையா? கடப்பாரையும் மண்வெட்டியும், ஒரு கூடையும் இருந்தால் போதுமே, மண்ணை வெட்டி வெட்டித் தூக்கி எறியலாமே'' என்று சொல்லக்கூடும். சொல்வது சுலபம்! ஆனல் செயலில் காட்டுவது! அதுகூடச் சுலபம் தான் என்பதை கடந்த ஞாயிறன்று (10—5—59) நமது கழகத் தோழர்கள் உணர்த்திவிட்டார்கள்.

'பாலாற்று நீரைப் பருக...... உழைப்பைத் தாரீர்' என்று நகர மன்றக் குழுவின் சார்பில் அறிக்கை வந்தது. பலர் தங்கள் உழைப்பை நல்கினர். காங்கிரஸ் கட்சியும் தன்னல் இயன்ற அளவு பணிபுரிந்தது.

நம்முடைய கழகம் நாள்தோறும் ஊருக்கு உழைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறது. ஆனலும் 10-5-59 ஞாயிற்றுக்கிழமையன்று நீருக்கு உழைக்கத் தீர்மானித்தது!

கங்கைகொண்டான் மண்டபத்தருகில் நூற்றுக்கணக்கான கழகத் தோழர்கள் கூடியிருந்தனர். அந்த இடத்தில் நம்முடைய தோழர்கள் கூடியிருப்பது புதிய காட்சியல்ல. ஏன் எனில் நம்முடைய கூட்டங்களில் பல அங்குதான் நடக்கும். ஆனல் அன்றைக்கு இருந்த புதுமை என்னவென்றல் மாலையிலே கூடிப் பழக்கப்பட்டவர்கள் காலையிலே கூடினர்கள். சொற்பொழிவைக் கேட்டுக் கைஒலி செய்வதற்கு வாய்ப்பாக வெறும் கையராக வருகின்றவர்கள் அன்றைக்கு ஆளுக்கு ஒரு கடப்பாரையோ, மண்வெட்டியோ, கூடையோ, தட்டோ எடுத்து வந்திருந்தனர். சிலருடைய கையில் ஒருபையும் இருந்தது. அவர்களுடைய முன்யோசனை வெயில் ஏறஏறத்தான் தெரிந்தது!

காலைக் கதிரவன் கார் இருளைப் போக்கும் நேரத்திலே கழகக்காளையர் கடமை வீரராகக் கொடியும், தங்கள் கழகப்பெயர் பொறித்த தோரணமும் தாங்கி வெற்றி நோக்கி நடையயிலும் படைமறவர்போல் புறப்பட்டனர். இந்த அரிய காட்சியைத் தெருவின் இருமருங்கிலும் நின்றிருந்த தாய்மார்களும், பிறரும் கண்டு பாராட்டினர். ஒரு இடத்தில் குழாய் அடியில் இருந்த குடத்தை நீர் நிரப்பாமலே ஒரு அம்மையார் திருப்பி எடுத்துக்கொண்டு சென்ருர் "ஏன்?'' என்று கேட்டபோது அந்த அம்மையார் சொன்ன பதில் இதுதான். "எவ்வளவு நேரம்தான் நிற்பது இங்கே. இதோ இவர்கள் புறப்பட்டுவிட்டார்கள். இனிவிரைவிலே பாலாற்றுப் பால் (தண்ணீர் தான்!) வந்துவிடும். அதுவரை கிணற்றுத் தண்ணீரையே குடிக்கலாம்'' என்ருர்கள்! பலருடைய உள்ளங்களிலே அத்தகைய நம்பிக்கையை ஊட்டியவண்ணம் ஆறு நோக்கிச் சென்றனர் ஆற்றல் படையினர்.

இவ்வளவு அகலம், இவ்வளவு ஆழம் என்று கொத்திக் குழி எடுக்க வேண்டிய பகுதியைக் கோடிட்டுக் காட்டினர்கள்.

அவ்வளவுதான்!

சண்முகம் நினைவு மன்றம், மறுமலர்ச்சிக் கழகம், பகுத்தறிவு மன்றம், நெடுஞ்செழியன் படிப்பகம், வள்ளுவர் படிப்பகம், அன்பழகன் படிப்பகம், பன்னீர்ச்செல்வம் படிப்பகம், திருவள்ளுவர் கழகம் உதய சூரியன் படிப்பகம், அக்கணம் பாளையத் தெரு தி. மு. க. 21-வது வட்டம் உதயசூரியன் படிப்பகம், எம். ஜி. ஆர். படிப்பகம், அரங்கசாமி நினைவு மன்றம், ஈ. வி. கே. சம்பத் படிப்பகம், கே. வி. கே. சாமி நினைவு மன்றம், வேலாயுதம் படிப்பகம், மண்டபத்தெரு, கே. வி. கே. சாமி படிப்பகம், 'திராவிடநாடு' அலுவலகத் தோழர்கள், அறிவு வளர்ச்சிக் கழகம், பொதுநல மன்றம், தியாகராய மன்றம், 5, 6, 7, 8 ஆகிய வட்டத் தோழர்கள், ஏழாச்சேரி தி. மு. க. ஓரிகை எஸ். எஸ். ஆர். படிப்பகம், காலூர் தி. மு. க. ஆகிய அமைப்புக்களின் சார்பில் வந்திருந்த சுமார் ஆயிரத்து ஐந்நூறு (1500) தோழர்கள் தங்கள் பணியைத் தொடங்கினர்கள்.

கொண்டுவந்திருந்த கொடிகளைப் பக்கத்தில் இருந்த ஏரிக்கரையின் மீது வரிசையாக நட்டிருந்தனர். அந்த வரிசையை மட்டுமே இன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கலாம் போலிருந்தது!

அப்படிப் பார்த்துக்கொண்டிருந்தால் சும்மா இருக்க முடியாது! ஏன் தெரியுமா? அந்தக் கொடிகள் "வேலை செய்யுங்கள் வேண்டிய மட்டும் செய்யுங்கள்'' என்று சொல்லிக்கொண்டிருந்தன. வாயாலா? அல்ல!

அடிக்கிற காற்றில், அந்தக் கொடிகள் அசைந்து ஆடிக்கொண்டிருந்த அழகு அதைத்தான் சொல்லியது? கழகக் கொடி ஆயிற்றே! அசைவிலேயும் கருத்து இருக்காதா என்ன!

கொடியாட, கொடி நிழலில் நின்ற நமது தோழர்களின் மனம் களிநடமாட, உடல் உழைப்பில் ஆட, மண் அசைந்தாடியது!

கட்டிகள் பெயர்ந்தன. பாறையோ என்று பார்வைக்குத் தெரிந்த இறுகிய மண்திட்டு, இருந்த இடம் தெரியாது கரைந்தது. களிப்பான இடங்களில் புதைந்த கடப்பாரைகளைக் கழற்றிஎடுப்பதற்குத் தனிப் பயிற்சி தேவைப்பட்டது. அப்படிப்பட்ட பகுதியிலே பணிபுரிந்த ஒரு தோழர் கொஞ்சம் கற்பனையோடு, சொன்னர் "இதோ பார்த்தீர்களா நாங்கள் வெல்லப் பாகில் வேலை செய்கிறோம்" என்று!

நடந்து வந்தவர்களும், மிதி வண்டியில் வந்தவர்களும், மிதியிழுப்பு வண்டியில் வந்தவர்களுமாக நகர மக்களில் பலர் வந்து வந்து இந்த வேள்வியைக் கண்டு களித்தனர். அவர்களில் பலர் அங்கு வந்த பிறகு தங்கள் பங்கும் கொஞ்சம் இருக்கட்டும் என்று சில இடங்களில் வேலையும் செய்தனர்.

தாய்மார்கள் பலர், குறிப்பாக ஆசிரியைகள் வந்திருந்தனர். சில தாய்மார்கள் களைத்துப்போன தங்கள் கணவர்க்குக் கஞ்சி கொண்டு வந்தனர்—கலயத்தில் தான்!

"வாய்க்கால் வெட்டும்
களைப்பிலே நான் வந்து குந்துவேன்
வரப்பிலே—நீ
கஞ்சி கொண்டுவருவே
கலயத்திலே"

என்ற பாட்டைக்கேட்டுப் பக்குவப்பட்டவர்கள் போலும் அவர்கள்!

திடீரென்று எல்லாப் பகுதியிலிருந்தும் "தண்ணீர் தண்ணீர்" என்று குரல் வந்தது. ஒரே திகைப்பு! என்ன வியப்பு இது! ஒரு அடி ஆழத்திலா தண்ணீர் வந்துவிட்டது! என்று வியந்து கொண்டே குழியை எட்டிப்பார்த்த போது அங்கே தண்ணீரைக் காணேம். "தண்ணீர் இல்லையே" என்றேன். பக்கத்தில் இருந்த தோழர் ஆமாம் தண்ணீர், அந்தக் குழியிலேயும் இல்லை. இந்தக் குழியிலேயும் இல்லை" என்று தன் நெஞ்சக் குழியைத் தொட்டுக் காட்டினர்.

எனக்குக்கூட அப்போது 'தாக'மாக இருந்தது!

அந்த நேரத்தில் நகரமன்றத் தலைவர் **கிருட்டினசாமி** அங்கே வந்தார். அவரிடத்தில் "தண்ணீர் வேண்டும்" என்று சொன்னதும். "ஆகட்டும்" என்று அன்போடு சொன்னர். 'தண்ணீர்லாரி' ஒன்று சற்று நேரத்திலே அங்கே குறுக்கும் நெடுக்கும் போய்க்கொண்டி ஆரன் அலறியது. திரும்பிப் பார்ப்பதற்குள் "சார்" என்று ஒரு கருப்புக் கார் வந்து நின்றது. அதற்குள்ளே இருந்து பானை, அதற்கு ஏற்ற மூடி, முகக்க ஒரு சின்னக் குடுவை இப்படி வகை வகையாக வெளிவந்தன. 'லாரி'யில் வந்த நீரை வாங்கி வைத்துக் கொள்ள வேண்டாமா? இப்படி இரண்டு மூன்றுமுறை பானைகளைக் கொண்டு வந்து இறக்கியது அந்தக் கார். **மண் பானைகளைக்** கொண்டு வந்தவர் யார் என்று கேட்கிறீர்கள்? வேறு யார்? **தங்கவேலர்**தான்! அதோடு விட்டாரா அவர்? 'மொத்தம் எத்தனைப்பேர்?' என்று கேட்டார். 'இதென்ன கூலிக்கு செய்யும் வேலையா, கணக்குக் கேட்கிருரே என்று' திகைத்தனர் நமது தோழர்கள். ஏதோ ஒரு கணக்குச் சொன்னர்கள். 'ஏன் எதற்கு' என்று சொல்லாமலே கார் ஏறிச் சென்றுவிட்டார் அவர். கொஞ்ச நேரம் கழித்து ஒரு வாழைப்பழ வண்டி, ஒரு பிழிவு வண்டியோடு சேர்ந்து வந்தது! பின்னலே தங்கவேலர் வந்தார். 'ஆளுக்கு ஒரு பழம், ஒரு கிரஷ்' என்ருர். முன்னமேயே இன்னும் கொஞ்சம் கணக்கைக் கூட்டிச் சொல்லியிருக்கலாமே என்று சிலர் நினைத்தார்கள். இதை உணர்ந்த அவர் ஏராளமாகக் கொண்டு வந்திருந்தார். கொஞ்சம் பழங்களும் பிழிவும் மிகுந்தது. வேறு பகுதியில் வேலை செய்துகொண்டிருந்த காங்கிரஸ் தொண்டர்களுக்கு அதை எடுத்துச் சென்ருர் அவர்!

"இப்போது இப்படித்தான் சுறுசுறுப்பாக இருப்பார்கள். வெயில் ஏற ஏறப் பார்க்கவேண்டுமே" என்ருர் குளிர் கண்ணுடி அணிந்து விரித்த குடையோடு காலில் செருப்பணிந்து புளிய மரத்தின் கீழ் நின்று வாடிய ஒருவர்.

வெயில் ஏறியது. அவர் சொன்னதுபோல் **சுறுசுறுப்புச் சுருங்கவில்லை; வேலையில் விறுவிறுப்பு ஏறி இருந்தது.** அவரிடம் இதைச் சொல்லிவிட்டு வரலாம் என்று போனேன். அவரை அங்கே காணேம். வெயில் கொடுமை தாங்காது போய்விட்டாரோ என்னவோ! பார்க்கும் போது மறக்காமல் கேட்க வேண்டும்.

குழியின் ஆழம் மிகுதியாகிக் கொண்டிருந்தது. தோழர்களின் உடலில் வியர்வை ஆறும் வழிந்து கொண்டேயிருந்தது.

சாப்பாட்டு வேளை வந்தது. ஒவ்வொரு பகுதியாக வந்து சாப்பிட்டுச் சென்றனர். மற்றப் பகுதியில் பணி தடையில்லாமல் நடந்து கொண்டிருந்தது.

'இவ்வளவு பேருக்கும் எங்கே சமைத்தார்கள்?' என்று தானே விழிக்கிறீர்கள்? யாருக்குத் தெரியும்? யார் யாரோ, அவரவர்களால் முடிந்த அளவு ஏதேதோ செய்து அனுப்பினர், அவ்வளவுதான்.

மாலை மூன்று மணிக்குப் பல பகுதிகளில் அவரவர்களுக்கு என்று குறித்துவிடப்பட்ட அளவுகளைத் "தீர்த்துக் கட்டிவிட்டனர்." சிலர் வேறு பகுதிகளில்போய் ஒரு கைகொடுத்து உதவிசெய்தார்கள். நாலரை ஐந்து மணிக்கெல்லாம் நமது பங்கு உழைப்பு நிறைவேறியது. **சுமார் 850 அடி நீளத்துக்கு நமது கழகம் ஒரே நாளில் நான்கு அடிக்குக் குறையாத ஆழமுள்ள (சில இடங்களில் ஆறு அடிகூட இருந்தது ஆழம்) குழியை வெட்டிவிட்டார்கள்.**

அன்று ஒரு பெரிய 'அதிசயம்' நடந்தது. அதையும் சொல்லித்தான் ஆகவேண்டும்.

நிழற்படம் எடுத்துக் கொள்வதிலும், பிறர் எடுக்கிற நிழற் படங்களில் போய் 'விழுவதிலும்' பலருக்கு ஆசை இருக்கும்.

நமது தோழர்கள் உழைக்கும் காட்சிகளை இரண்டொரு தோழர்கள் படம் எடுத்தனர். பிற இடங்களில்'காமிரா' கருவியைக் கையிலே வைத்திருப்பவருக்கு 'கிராக்கி' அதிகமாக இருக்கும். ஆனல் நமது முகாமிலோ அவரைக் கவனிப்பார் இல்லை! இது பெரிய அதிசயந்தானே!

யார் யார் இந்த உழைப்பு வேள்விக்கு முன்னின்று பாடுபட்டார்கள் என்றெல்லாம் சொல்லுவதாஞல் எல்லாருடைய பெயர்களையும் எழுத இடம் இருக்காது. ஆகையால் ஒருவர் பெயரையும் எழுதாமல், நமது கழக நகரமன்ற உறுப்பினர்களையும், நகரக் கிளைச் செயலாளரையும் கிளைக் கழகங்களையும், காங்கிரஸ் தோழர்களையும் நினைவு கூர்ந்தால் போதும்!

இன்னும் எவ்வளவோ எழுத ஆசைதான். ஆனல் கடப்பாரை தூக்கியதால் எழுந்த கொப்புளங்கள் இந்தச் சின்னப் பேனவையும் தூக்கத் தடையாக இருக்கின்றன!

உழைப்பு வெல்க!

4-ம் பக்கத் தொடர்ச்சி

தவர்களைத்தான் நாடுகின்றனர், தேர்தல்களின் போது. குறைபட்டுக்கொள்ளும் இதே டாடா நிர்வாகம், காங்கிரஸ் தேர்தல் நிதிக்காக இலட்சக்கணக்கில் கொட்டிக் கொடுத்த விபரம், பத்திரிகைகளிலெல்லாம் வந்ததே!!

*

காலனி ஆதிக்கம் என்ன கேடு செய்யும் என்பதையும் அறிவார் நேரு!—அதே சமயத்தில் நம்மை காலனியாக்கவும் செய்கிறார்!!

ஆலைசெய்யும் என்ஜினியர்களின் திறமையையும் அறிவார் நேரு! — அதே சமயத்தில், வெளிநாட்டிலிருந்து இயந்திரங்கள் இறக்குமதி செய்யவும் அனுமதிப்பார்!!

பண அரசர்களின் சுபாவம் இன்னதென்றும் அறிவார் அவர்! — அதே நேரத்தில், அவர்களுக்கு வேண்டிய உதவிகளையெல்லாம், செய்தும் கொடுப்பார்!!

இத்தனையும் செய்யுமிடத்தில், தானேயிருந்து நிறைவேற்றிவிட்டு, கட்சியிலுள்ள பிறரைச் சந்திக்கும் போது மட்டும் — காரியக்கமிட்டி, பொதுக் கூட்டம் நடைபெறும் வேளையில் மட்டும்—கர்ச்சிப்பார். ஏதோ அப்போதுதான், வெளிநாட்டிலிருந்து பிரவேசம் செய்த புத்தரைப்போல் போதனைகளைச் சொரிவார்.

வயலையே நம்பி வாழும் நாடு, கெடும்!—என்ற போது, எங்கள் கதி அப்படித்தானிருக்கிறது. ஆலைகள் பெருக எவ்வழியும் செய்யவில்லையே நீங்கள்? — என்று கேட்டிருக்கலாமல்லவா, போயிருந்த சுப்பிரமணியம்.

இயந்திரங்களை இப்படி இறக்குமதி செய்கிறோமே! —என்று அங்கலாய்த்தபோது, உங்கள் வசம்தானே, அதற்குள்ள அதிகாரம் இருக்கிறது, ஏன் தடுக்கக் கூடாது? — என்று, கேள்வியொன்றை வீசியிருக்கலாமே, சென்னை சர்க்கார் சார்பில்.

பணக்காரர்கள் போக்குப்பற்றிக்கண்டித்தபோது, "ஏன் தேர்தல் நேரத்தில்மட்டும் எங்களை கோயமுத்தூருக்கும் மதுரைக்கும் ஓடிப் பணக்காரர்களிடம் நிதிப்பிச்சை வாங்கச் செய்கிறீர்கள்?" என்று ஒரு வினா எழுப்பியிருக்கலாமல்லவா காமராஜர்.

ஒருவேளை, நேருவின் சூடு, 'குளுகுளு' வாசத்திலிருந்து நேரே சென்றதால், இவர்களுக்கு உறைக்கவில்லைப்போலும்! சாதாரணநாட்களிலேயே,எவ்வளவுதான் குட்டுப்பட்டாலும், சொரணையில்லாத இவர்களுக்கு இப்போதுமட்டும் எங்கிருந்து பிறக்கப்போகிறது, ஞானோதயம். இவர்களே, அந்த நேருவின் தயவால், இங்கே மந்திரிகளாயிருப்பவர்கள்தானே! சுயநலம் இல்லாதிருப்பின், தட்டிக்கேட்டிருக்கலாமன்றோ இவற்றையெல்லாம்!!

பண்டிதர், செய்வதையெல்லாம் செய்துவிட்டுப் போதனை புரிகிறார்.

இவர்களும், 'ஆமாம்' போடும் ஆசாமிகளாயிருக்கிறார்கள், பதவியின் காரணத்தால்.

இப்படிப்பட்டவர்களிடம் சிக்கிக்கொண்டிருக்கும், தாயகமே, உன் எதிர்காலம்தான் என்ன என்று தட்டிக் கேட்டுக்கொண்டிருப்பது திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான்.

*

நெல்லை மாவட்ட
தி. மு. கழக 3-வது மாநாடு

தென்காசியில் (கீழப்புலியூர் புகைவண்டி நிலையம் வட்புறம்)

மே திங்கள் 16, 17 சனி, ஞாயிறு ஆகிய நாட்களில்

கே. வி. கே. சாமி பந்தல்—தாளமுத்து அரங்கில் நடைபெறும்.

தலைவர்:-
என். வி. நடராசன்
துணைப் பொதுச்செயலாளர்

—★—

திறப்பாளர்:
கவிஞர் கண்ணதாசன்

அண்ணாதுரை, நாவலர் நெடுஞ்செழியன்

கழக முன்னணி வீரர்கள்—நடிகர்கள் மற்றும் பலர் கலந்துகொள்வர்.

கலைஞர் கருணாநிதி பங்கேற்று நடிக்கும்
"உதயசூரியன்"
நாடகம் நடைபெறும்.

★

நாகூர் அனீபா
இன்னிசை உண்டு.

கடிதமும் காங்கிரசும்!

"என்ன கடிதம் தெரியுமா இது? சாதாரண கடிதமல்ல! சர்க்காரை நடத்தும் பொறுப்பிலுள்ள அமைச்சர், எப்படிக்கொள்கிறார் என்பதைக் காட்டும் கடிதம்! காங்கிரஸ் மந்திரிகளின் போக்கை விளக்கும் கடிதம்! வேதனையூட்டும் இக்கடிதப்படி, ஒரு முதலாளிக்கு 'ஏஜண்டு' போல இருந்து, இரகசியச் செய்திகளை, அப்போதைக்கப்போது அனுப்பிக் கொண்டிருந்திருக்கிறார் மந்திரி. துர்காபூரில், சர்க்கார் ஒரு இரும்பு உருக்கு ஆலையை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த ஆலையைத் தனிப்பட்ட முதலாளிகள் வசம் விடுவதா, சர்க்காரே ஏற்று நடத்துவதா என்று மந்திரிசபை கூடிப்பேசி, தனிப்பட்ட முதலாளிகள் வசம் விடுவதில்லையென்று முடிவெடுத்தது. இந்த முடிவை அவசர அவசரமாக பிர்லாவுக்கு எழுதியிருக்கிறார், மந்திரி. பொறுப்புள்ள பதவி வகிப்பவர், பொறுப்பை இப்படியெல்லாம் விற்றிருக்கிறார்,"

*

"என்மீது தப்பில்லை! என்னைப் போலவே, டாக்டர் சத்ய நாராயண் சின்கா என்கிற பெயர் கொண்ட ஒருவர், பார்லிமெண்டு உறுப்பினராக இருந்தார். எனக்கு வரும் கடிதங்கள் அவருக்கும், அவருக்கு வரும் கடிதங்கள் எனக்குமாக மாறிவந்து விடுவதுண்டு. அதுபோல, எனக்கு வந்த கடிதம் அவர் கையில் சிக்க, அதைப் பலர் பார்லிமெண்டு உறுப்பினர்களிடம் அவர் காட்டியதாகக் கேள்விப்பட்டு, நான் விசாரித்தேன். கடிதத்தை போட்டோ எடுத்து வைத்துக் கொண்டு, என்னிடம் அவர் கொடுத்தாற் போலிருக்கிறது. அப்போது எடுக்கப்பட்ட புகைப்படத்தை, இப்போது, கொண்டு வந்து காட்டிக் குற்றம் சுமத்துகிறார், உறுப்பினர் பூபேஷ் குப்தா."

* * *

கடிதம், இதோ!— என்று காட்டினார், குற்றம் சாட்டிய உறுப்பினர் பூபேஷ் குப்தா. கடிதம், கண்டு கலங்கினார்!— அமைச்சரான, சத்ய நாராயண் சின்கா.

டில்லிப் பார்லிமெண்டில், சின்னாட்களுக்கு முன், இந்தச் சுவையான நிகழ்ச்சி நடந்தது.

* * *

"பிர்லாவுக்கு நான் கடிதம் எழுதியது உண்மை. அது, தனிப்பட்ட முறையில், எழுதப்பட்ட கடிதம், ஒப்புக்கு ஒரு வார்த்தையாக, துர்காபூர் ஆலையைச் சர்க்காரே ஏற்று நடத்தப் போவதாகத் தெரிவித்திருந்தேன். அவ்வளவே ஒழிய, நான் ஒன்றும் குற்றம் செய்யவில்லை."

*

"ஐயா! இதோ, பிர்லா, இவருக்கு எழுதிய கடிதத்தின் போட்டோ நகல். இதைக் காட்டி நான் குற்றம் சுமத்துகிறேன். ஆனால், அவர் சுற்றி வளைத்துப் பதில் தருகிறார். மறுப்பாரா அமைச்சர், பிர்லா, இப்படியொரு கடிதம் எழுதவில்லையென்று?"

* * *

எப்படி மறுப்பார், அமைச்சர்? உறுப்பினர் போட்டோ நகலுடனன்றோ, குற்றம் சுமத்துகிறார்!

"அதுதான்சொன்னேனே, பிர்லாவுக்கும் எனக்கும் தனிப்பட்ட தொடர்பு உண்டு என்று! ஆனால், அதற்காக நான் ஒருபோதும் சர்க்கார் இரகசியத்தை அவரிடம் வெளியிடவில்லை. ஆமாம். நம்புங்கள்,'' என்று சொல்லிவிட்டு, உட்கார்ந்திருக்கிறார் அமைச்சர்.

காங்கிரஸ் நிர்வாகம், எப்படியிருக்கிறது?— என்பதற்கு இது ஓர் உதாரணம். பிர்லா, கோடீஸ்வரன்! அவருக்கு, ஒரு ஏஜண்டு போல, ஒரு அமைச்சர்!! சர்க்கார் என்னென்ன செய்கிறது, எப்படி எப்படி முடிவுகள் எடுப்பதாக இருக்கிறது என்கிற தகவல்களை முன் கூட்டியே சொன்னால், பிர்லாவால், எவ்வளவோ செய்து கொள்ள முடியும்.

பிர்லாவுக்கும் காங்கிரசுக்கும் நீண்ட நாள் தொடர்பு உண்டு.

டில்லியிலிருந்தபோது, காந்தியடிகள் வாசம் செய்ததும், குண்டடிபட்டதும், பிர்லாவுக்குச் சொந்தமான மாளிகையில்தான்.

தற்போது முசௌரியில் தஞ்சம் வந்திருக்கும் டலாய்லாமா தங்கியிருப்பது கூட, பிர்லாவுக்குச் சொந்தமான, ஒரு மாளிகையில் தான்.

இவ்வளவு பண வசதி, படைத்தவர் பிர்லா! அவருடன், தனிப்பட்ட தொடர்பு இருக்கிறது என்கிறார் அமைச்சர்!!

சரி! சொந்த விஷயம் எழுதுவதென்றால், என்ன எழுதுவார்கள்? நலம், நலம் எப்படி. மனைவி சௌகரியம், உங்கள் மனைவி எப்படி. —இப்படித்தானே இருக்கவேண்டும் கடிதம். ஆனால், சத்யநாராயண் சின்கா எழுதிய கடிதத்தில் தெளிவாகவே தகவல் தந்திருக்கிறார் பிர்லாவுக்கு.

கடிதம் கண்டதும் பிர்லா அனுப்பிய பதில் மூலம், குட்டு வெளிப்பட்டிருக்கிறது. அமைச்சரைப்போல் பெயர்கொண்ட இன்னொருவர் கைக்குக் கடிதம் கிடைத்தது, அதன்மூலம் விபரம் தெரிந்தது என்கிற விளக்கம் நமக்குத் தேவையில்லை.

ஆனால், இப்படியொரு கடிதம் வந்ததென்பதையும், தான்எழுதியதையும், அமைச்சர் மறுக்கவில்லை! நாடாளும் பொறுப்பில், உட்கார வைக்கப்பட்டவர்களின் இலட்சணம் 'டி. டி. கே.' மாடலில் இருக்கிறது!!

பாட்னாவில், சில நாட்களுக்குமுன் பேசிய நேரு பண்டிதர் அவர்களோ உலகுக்கே பறைசாற்றுகிறார். "காங்கிரஸ் கட்சியைவிடச் சிறந்தது இல்லை. எங்களுடைய நல்லெண்ணம்தான் ஐந்தாண்டுத் திட்டங்களாக உருவெடுத்திருக்கிறது. நாட்டை உன்னதமாக்கும் யோசனை ஒன்றுதான் இப்போது எங்கள் மூளையிலிருப்பது" என்று.

பண்டிதர், பிரதிபலன்எதிர்பாராமல், நாட்டுக்குச் சேவை செய்கிறோம் நாங்கள் என்கிறார்! அப்படிப்பட்ட கட்சி, காங்கிரசுதான் என்றும் வலியுறுத்திச் சொல்கிறார்!!

இதோ, காங்கிரசு அமைச்சர், ஒரு இரகசியத்தைப் பணக்காரருக்கு, முன்கூட்டி எழுதித் தெரிவித்த, தகவல் கிடைத்திருக்கிறது, மறுக்கவுமில்லை அமைச்சர். முனகியிருக்கிறார்!!

"சுயநலமில்லாத இயக்கம் என்பதெல்லாம் சரியா. நீங்கள் இப்படிச் சொல்வதை வேத வாக்காக ஏற்றுத் தொண்டர்களாகிய நாங்கள் எல்லாம் பணிபுரிய வேண்டும் என்பதும் சரிதான். ஆனால் ஒன்று, நீங்கள் வீராவேசமாகப் பேச, அதைக்கேட்டு வெறிபிடித்தவர்களாகி ஓடி ஆடி வேலைசெய்யத்தானா நாங்கள் இருக்கிறோம்? தலைவர்களாகிய நீங்கள், எல்லா இலாபங்களையும், எம். எல். ஏ; எம். பி. போன்ற பதவிகளையும் வகித்துக் கொண்டு ஆனந்தமாகஇருக்கும்போது, நாங்கள் மட்டும், எப்போதும் உழைத்துக்கொண்டா

இருக்கவேண்டும்? எங்களுக்கும் ஏதாவது போடுங்கள்! அதுதான் நியாயம்!!," என்று பேசியிருக்கிறார், பம்பாயைச் சேர்ந்த ஆர். எஸ். பாண்டே என்பவர்.

பண்டித நேரு போன்ற பெரிய பெரிய தலைகள் எல்லாம் இருந்த காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில்தான், பாண்டே, வெட்ட வெளிச்சமாகக் கேட்டிருக்கிறார்.

பதவியை வைத்துச் சிநேகம்பிடிப்போர்.

பதவியின் மூலம் சம்பாதிப்போர்.

பதவியால் வாழ்வோர்.

இவர்களையெல்லாம் காணும் போது, 'ஜே' போட்ட எந்தத் தொண்டனுக்குத்தான், ஆசை வராது.

"நாங்கள் என்ன எல்லாம் துறந்தவர்களா? எங்களுக்கு மட்டும் பிள்ளைகுட்டி, குடும்பம் கிடையாதா!!" — என்று வேதனையுடனேயே கேட்கிறார், பாண்டே.

மாதாமாதம், தொண்டர்களாகிய எங்களுக்கும் சம்பளம் போட்டுக்கொடுங்கள் அப்போதுதான் நாங்களும் உற்சாகமாக வேலை செய்ய முடியும் என்கிறார்.

'சம்பாதித்தவர்கள் எல்லாம் உத்தியோகத்தை விட்டுவிட்டுக், காங்கிரசில் சேர்ந்தது ஒருகாலம்! உத்தியோகம் கிடைத்துச் சம்பாதிப்பதற்காகக்காங்கிரஸ் தொண்டனாக வருகிறேன் என்பது இந்தக் காலம்!'

வக்கீல்கள், கடையை இழந்தோர், மாணவர்கள், உயர்தர அதிகாரிகள் எல்லாம் ஓடோடியும் சேர்ந்தது, ஒருகாலம்!

வந்து வேலைசெய்கிறேன் மாதச் சம்பளம் என்ன தருகிறாய்? — என்று பேரம் பேசுவது இந்தக் காலம்!!

பாண்டே போன்ற தொண்டரை யாரும் குற்றம் சொல்ல முடியாது.

அவர்கள் எத்தனை காலத்துக்குத்தான் 'ஏணி'களாக இருப்பார்கள்? அதுவும் நேற்று வந்தவர்களெல்லாம், திடீரென, எம். எல். ஏ. ஆகவும் எம். பி. ஆகவும் — ஏன்? மந்திரிகளாகவும் — இருக்கின்ற காட்சியைப் பார்க்கிறபோது, இப்படிப் பதவிகளிலிருப்பதால் அனுபவிக்கிற ஆனந்தங்களை எண்ணுகிறபோது, எந்தத் தொண்டனுக்குத்தான் ஆசை வராது? அகப்பட்டவரையில் அடிப்போம், எனும் எண்ணம் வராது!!

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

அவனை ஒரு பிற்போக்குவாதி, தேசத்துரோகி, நான்சென்ஸ், காட்டுமிராண்டி என்று ஏசினார், திட்டினார். இதை, ரேடியோ, சினிமாமூலம் எல்லாம் பரப்பினார், பிறகு, தன் கட்சியின் காரியக்கமிட்டியைக்கூட்டிக் கலந்தார். அந்தக் காரியக் கமிட்டியில் வந்த பலர், வழுக்கைத் தலையுடனிருக்கவே, அவருக்கு யோசனைவந்தது. என்ன இருந்தாலும் கட்சித் தலைவர்களைக் காட்டிக் கொடுக்கலாமா? அதனால், எல்லோரும் மொட்டையடித்துக்கொள்வதுதான் தேசத்தின் கீர்த்திக்குகந்த காரியம். இதனால், தலைக்குத் தடவும் எண்ணெய் மிச்சம், தலைசீவும் நேரம் மிச்சம், இந்த மிச்சத்தை ஐந்தாண்டுத் திட்டத்துக்குப் பயன்படுத்த, ஆண்கள் பெண்கள் சகலரும், மொட்டையடித்துக்கொண்டு, தேசத்தின் ஐக்கியத்தையும், ஒற்றுமையையும் நிலைநாட்டுவார்களாக! — என்று அறைகூவல் விடுத்தார்.

இந்த விஷயத்திலும், ஒரு ஒற்றுமையை உண்டாக்கச் சட்டம் செய்துவிட்டோம், இனி எந்தக் கவலையும் இல்லை, என்று ஆனந்தத்துடன், ஆட்சி புரிய ஆரம்பித்தார்.

*

"மொழி! உடை! தலை! இதில் தேசிய ஒற்றுமையை உண்டாக்கிவிட்டால் போதுமா? நம் தேசத்தில் எல்லோரும் ஒரேவிதமாகச் சாப்பிடுவதில்லை. ஒரு பக்கம் கோதுமைச் சப்பாத்தி, இன்னொரு பக்கம் அரிசிச் சோறு. இது, எவ்வளவு பேதமும் பிளவும் உண்டாக்குகிறது. இதில் ஒரு ஒற்றுமையை உண்டாக்காவிடில், தேசம், பிளவுபட்டு, பாகிஸ்தான்களாகப் போய்விடும். ஏதாவது செய்யுங்கள்!" என்று ஒரு குரல், எழுந்தது. இதைக்கேட்ட அந்த உலக உத்தமருக்கு, நியாயம்தான் என்றுபட்டது.

உணவு விஷயத்தில் வேற்றுமை கொண்டாடுவது ஒரு நாடா? என்று, சிந்திக்கலானார்.

இப்படி அவர் சிந்திப்பது பற்றிக் கேள்விப்பட்ட, மக்களுக்குப் பெருத்த கவலையுண்டாயிற்று. புரியாத மொழியைப் பொது மொழி ஆக்கினார்! அரசாங்கத்துக்கு ஒரு மனு எழுதவும் முடியவில்லை! போதாதென்று, கோவணதாரிகளாகவும்ஆனோம் —பெண்டு பிள்ளைகள் வெளியே கிளம்பாமல் வீட்டிலேயே கிடக்க வேண்டியதாயிருக்கிறது! கடைசியில், நன்றாக, மொட்டையும் அடிக்கப்பட்டோம்! இப்போது, உணவுவிஷயத்தையும், தேசியம் செய்யப்போகிறதாமே நம்ம சர்க்கார்! இந்தத்தேசத்திலிருப்பவர்கள் மூன்றுவேளையும் இந்தவிதமான சாப்பாட்டைச் சாப்பிட வேண்டும் என்று ஏதாவது தாறுமாறாக உத்தரவு போட்டுவிட்டால், என்னசெய்வது! உத்தரவு போடுவதற்குப் பதில் சாப்பாடாவது போட்டால், ஏதையாவது சாப்பிட்டு வயிற்றை நிரப்பலாம்! இங்கேதான், ஒருவேளை சோற்றுக்கே லாட்டரி அடிக்கிறோமே? திடீரென்று, "மூன்று வேளை மூக்கைப்பிடிக்க இப்படிப்பட்ட உணவைச் சாப்பிடாதவர்களெல்லாம் தண்டிக்கப்படுவார்கள்?" என்று உத்தரவு வந்தால், எங்கே போவது, சாப்பாட்டுக்கு? ஏது பணம்? ஏது வேலை?—என்று மக்களிடத்திலே பீதியும் கலவரமும் உண்டாயிற்று.

அவரவருக்குத் தக்கபடி, அவரவர்களுடைய பழக்க வழக்கம், மொழி இவைகளின்படி, தனிமனித சுதந்திரத்துடன் வாழ்வதுதான் சுதந்திரம். பெரிய தேசம் என்பதற்காக, இப்படி பைத்தியக்காரத்தனமாக எல்லாவற்றிலும் "பொது"வை உண்டாக்குவதாகச் சொல்லி, வெறிபிடித்தலைவது விபத்து. எனவே, நம் நாட்டை, நாமே பிரித்துக் கொண்டு, நமக்குத்தக்கபடி ஆள்வோம்.

யானைக்குக் கோவணம் கட்டுவதுபோல, இவ்வளவு பெரிய நாடு என்பதால் என்ன கண்டோம்? பசியும், பட்டினியும் போகவில்லை! ஆனால் பரிசோதனைகளுக்கன்றோ ஆளாகி அவதிப்படுகிறோம்! நாம், நமது நாட்டினைப் பெற்றுச் சுதந்திரமாக இருந்தால் என்ன? — என்று யோசிக்கலாயினர், அந்த பரந்த நிலப்பரப்பில் அடைபட்டுக் கிடந்த மக்கள். அந்த யோசனை, வரவர, அதிகமாகி வருவதாகவும் தெரிகிறது.

❋

பதிவு எண்: எம். 4642 தொலைபேசி எண்: ... 118

அடிக்கிறது யோகம்!!

சங்கர சங்கர சம்போ!
சிமெண்டும் இரும்பும் எங்கோ?

*

நந்தவனத்திலோர் ஆண்டி!
கொண்டாடி தண்ணீர் ஓர் தோண்டி!!

*

கோவிந்தநாம சங்கீர்த்தனம்—
இந்தியா! இந்தியா!! இந்தியா!!!

* * *

கையில் கமண்டலம்! தாடிமீசை! உருத்ராட்சம்! நீறு! — கொண்ட சாதுக்கள் என்போர், இப்படியொரு புதுக்கோலம், பூணவேண்டுமென்று, அழைத்திருக்கிறார் குடியரசுத் தலைவர் பிரசாத்.

கதையொன்று சொல்வார்கள்’ ஒரு சன்யாசி, காலணா, அரையணாவாகத் தர்மம் வாங்கிச்சாகும்போது பதினாயிரம் ரூபாய்க்கு மேல் வைத்திருந்தான் என்று! இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள சாதுக்கள் சந்நியாசிகள் என்போருக்கு, ஒரே நாளிலே 25,000 ரூபாய் நன்கொடை வந்திருக்கிறது!!

நாட்டில், வாழவேண்டுமெனும் ஆசையுடன், குழந்தை குட்டியுடன் வதையும் ஏழைகள் ஏராளம். அவர்களுக்கெல்லாம்கூட, இப்படியொரு யோகம் அடிக்கவில்லை! ஆனால், உலகத்தையே துறந்தவர்கள், சாதுக்கள், சந்நியாசிகள், என்போருக்குஅடிக்கிறதுயோகம்!!

ஐந்து இலட்ச ரூபாயில் ஒரு கட்டிடம்.

புதுடில்லியில்!

வெளிநாட்டுத் தூதுவர் வாழுமிடமருகே!!

திகைப்பீர், சாதுகளுக்கேன் மாளிகை என்பீர். அந்த மாளிகை, சாதுக்களுடைய சமாஜத்துக்காகும். **பாரத சாது சமாஜம்!**—அதற்குத்தான் இப்படியொரு மாளிகை, 5 இலட்ச ரூபாயில்.

திறந்தவர், இராசேந்திர பிரசாத்! தலைமை வகித்தவர், குல்ஜாரிலால் நந்தா!!

மாளிகையின் திறப்பு விழாவை யொட்டி, இச் சமாஜத்துக்கு ரூ. 25,000 நன்கொடைகள் குவிந்ததாம்.

சாதுக்களுக்கேன் சமாஜம்? அந்தச்சமாஜத்துக்கேன்மாளிகை? —என்று கேட்பீர்கள். முற்றுந்துறந்த கோவணாண்டிகளுக்கு, மோகனாங்கியும், பட்டாடையும் தேவையில்லைத்தான்.

ஆனால், நமது டில்லிக் காங்கிரசாருக்கு இருக்கும், பஞ்சப்புத்தி நன்றாக விளங்குகிறது. ஊர் ஊராகச் சுற்றும் இந்தப் பண்டாரங்கள் மூலமாவது, தங்கள் கியாதி பரவாதா என்று எண்ணுகிறார்கள்.

பிரசாத் பேசியிருக்கிறார், ஊர் தோறும் செல்லும் சாதுக்கள், போகுமிடமெல்லாம் சர்க்காரின் சாதனைகளைச் சொல்லி, ஜால்ரா போட்டு, தம்புருமீட்டி, மக்களிடம் சொல்லவேண்டுமாம்.

ஏனெனில் ஏனையோரை விட, அவர்கள்தான் மக்களை அனுதினமும் சந்திப்பவர்களாம்.

பஞ்சப்புத்தி! அல்லது தஞ்சப்புத்தி!!—எதுவாகவேனும் இருக்கட்டும்; இந்தச் சாதுக்கள், இப்படியொரு மாளிகை கட்டுகிறார்களென்றால், கேட்கவேண்டாமா, ஆள்கிறவர்கள்? ஏனய்யா சோம்பேறிகளே, எதற்கு உங்களுக்கு ஒரு மாளிகை? இந்த ஐந்து இலட்சத்தைக் கொண்டு ஒரு கல்லூரி நடத்துங்களேன், என்று சொல்லக் கூடாதோ!!

அண்மையில்தான் நேருபண்டிதர் சொன்னார்:- சாமியார்கள், சாதுக்கள் என்று சொல்லி, சோம்பேறிகளாயிருக்கும் கூட்டத்தைக் கண்டால் எனக்குப் பிடிக்கவில்லை என்று.

ஆனால், இராசேந்திர பிரசாத், இந்தச் சோம்பேறிகளைத்தான், அழைக்கிறார்-நம்புகிறார்,நாட்டுக்கு, வழிகாட்டிகளாக இருங்கள்என்று.

தின்றுதிரியும் இக்கூட்டத்தால் கும்பமேளாக் கொடுமைகள் நடக்கின்றன! வாழ்வின்நிலையாமையைச் சொல்லிவிட்டு. சாதுக்கள் எனும் பெயரால், இவர்கள் செய்யும் சாதுர்யங்கள் ஏராளம்!!

சமுகத்தின் புண்களான இவர்களுக்கு, புத்திவரும் அளவில் இங்கிருந்தே அகற்றி அந்தமான் போன்ற தீவில்விட்டு உங்கள் பஜனையைச் செய்துகொண்டிருங்கள் என்றும் சொல்வதைவிட்டு, அவர்களைப் புண்யாத்மாக்களே! உங்களது பணியும் சேவையும் இந்திய அரசின் சாதனைகளை எடுத்துச் சொல்லி, மக்களுக்குப் பயன்பட உதவவேண்டும் என்கிறார், இராட்டிரபதி.

உண்மையில், சந்நியாசிகள்கூடி மடம் கட்டுவதும்;

அந்தச் சந்நியாசிகளின் பிரச்சார பலத்தை விரும்புவதும்;

வேடிக்கையாக மட்டுமல்ல, வேதனையாகவுமிருக்கிறது,

எத்தகைய பஞ்சப் புத்தி வந்துவிட்டது காங்கிரசுக்கு! பிரச்சாரத்துக்காகப் பிச்சாண்டிகளையுமன்றோ நாடுகின்றனர்!!

காஞ்சீபுரம் ஏ. திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்